அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பேயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

## நக்கல்நமசிவாயம்





மலர் : 01, இதழ் : 44 சார்வரி வருடம், ஆவணி மாதம் 04ஆம் திகதி வியாழக்கிழமை (20.08.2020) ஹிஜ்ரி - 1441, துல்ஹஜ் பிறை-29, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

# 19ஐ நீக்க அமைச்சரவை முடிவு!



★ புதிய அரசியலமைப்பில் - தேர்தல், மாகாண சபை முறைமைகள், கல்வி, சுகாதாரத்துறை முரண்பாடுகள் தொடர்பில் விசேட கவனம்

★ 20 ஆவது அரசியலமைப்புத் திருத்த வரைபை தயாரிக்க ஜீ.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, அலி சப்ரி, தினேஷ் குணவர்தன, உதய கம்மன்பில ஆகியோர் கொண்ட அமைச்சரவை உபகுழு நியமனம்



02



## திடீர் மின்தடை சதியாக இருக்கலாம் அமைச்சரவையில் ஜனாதிபதி கருத்து!

### "இரண்டு மணி நேரம் மின்நிலைய கட்டுப்பாட்டு அறையில் இருந்தேன்" - அமைச்சர் டலஸ்



மின்னுற்பத்தி நிலையங்களில் திடீரென இடம்பெற்ற மின்தடை சதிவேலையாக இருக்கக் கூடுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின்போது சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

திடீர் மின்தடை குறித்து அமைச்சரவை நேற்று விரிவாக ஆராய்ந்தது. மின்விநியோக தடை நடந்த நாள் முதல் இன்றுவரையான காலப்பகுதிக்குள் நடந்த விடயங்களை விபரித்து விசேட அறிக்கையொன்றை அமைச்சரவையில் சமர்ப்பித்தார் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும.

அத்துடன் மின்தடை நடந்த பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அமைச்சரவையில் விபரித்த அமைச்சர் டலஸ், முதல் துண்டிப்பு நடந்த கையோடு தாம் மின்னுற்பத்தி கட்டுப்பாட்டு அறைக்குச் சென்று நிலைமைகளை பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய எடுத்ததாகவும் ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள் மின் மீள்விநியோகத்தை வழங்க முடியாமல் போனதாகவும்... 02

## நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு மீண்டுமொரு வாய்ப்பு!

### அமைச்சர் டக்ளஸிடம் கோட்டாபய உறுதி!



ஆர்ப்பாட்டக்காரர்களையும் சந்தித்து ஜனாதிபதி ஆறுதல் 02

## -புதிய நாடாளுமன்றில்-

### வயதானவர் சம்பந்தன், இளையவர் ஜீவன்!





புதிய நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே வயதில் மூப்பானவராவார். அவருக்கு வயது 89. 02

## வெற்றிலைக் கூறின் விலை எகிறியது



02

## இனி 'காலுக்கும்' தடை!



02

## இரண்டு பேர் இல்லாமல் இன்று கூடும் நாடாளுமன்றம்:

### ஒரு ஐ.தே.க. உறுப்பினர் கூட இல்லாத முதல் சபையமர்வு!



9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஆசனங்கள் வெற்றிடமாகவுள்ளதாக நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தஸநாயக்க தெரிவிக்கின்றார். 02

## நாடாளுமன்ற கன்னி அமர்வு: 10 முக்கிய நடைமுறைகள்!

இலங்கையின் 09 ஆவது நாடாளுமன்றம் இன்று (20) காலை 9.30 ற்கு கூடுகிறது.

இன்றைய தொடக்க அமர்வின் போது பல முக்கிய நடவடிக்கைகள் நடைபெற உள்ளன. 02




AIA இன்ஷுவரன்ஸ் நிதியியல் ஸ்திரத்தன்மை - நிலையான சேவை.

- இலங்கையின் காப்புறுதித் துறையில் பாரிய மூலதன விகிதத்தினைக் கொண்டிருத்தல்.
- 30 வருடங்கள் தொடர்ச்சியாக இலாபப்பங்கினைப் பகிர்ந்ததில் சாதனை (2019 ஆம் ஆண்டு 9.99% ஐ பகிர்ந்துள்ளது).
- உயர் தரத்திலான முதலீடுகளை மேற்கொண்டிருத்தல்.
- ஓய்வூதியம் மற்றும் தேகாரோக்கியம் போன்ற ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களின் முன்னோடி.
- 100 வருடங்களுக்கும் மேலான அனுபவம் மற்றும் AIA குழுமத்தின் துணையுடன் முதல்தரத்துடன் உலகின் பாரிய ஆயுள் காப்புறுதியாளனாகத் திகழ்கின்றது.

*12 மார்ச் 2019 ஆண்டின் சந்தை மூலதன மதிப்பின் அடிப்படையில், உலகின் பாரிய ஆயுள்காப்புறுதி நிறுவனம்

ஓய்வூதியம், தேகாரோக்கியம் மற்றும் ஆயுள் காப்புறுதி

AIA இன்ஷுவரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES

TBWA\SRI LANKA

| சனிதா வாசனா | அத கோட்டிபதி | கோட்டிபதி கப்ருக | சனிதா வாசனா | அத கோட்டிபதி | சுப்பர் போல் | கோட்டிபதி கப்ருக |
|---|---|---|---|---|---|---|
| 3350 ஆவது வாரம் | 1010 ஆவது வாரம் | 611 ஆவது வாரம் | 3351 ஆவது வாரம் | 1011 ஆவது வாரம் | 1192 ஆவது வாரம் | 612 ஆவது வாரம் |
| 2020 ஓகஸ்ட் 12ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 14ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 14ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 15ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 15ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 15ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி |
| ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து X |
| 03 27 57 60 | 04 15 73 76 | 30 40 42 66 | 13 39 48 75 | 33 48 52 53 | 22 32 67 77 | 27 31 53 75 |

| சுப்பர் போல் | அத கோட்டிபதி | சனிதா வாசனா | சுப்பர் போல் | அத கோட்டிபதி | கோட்டிபதி கப்ருக | அத கோட்டிபதி |
|---|---|---|---|---|---|---|
| 1193 ஆவது வாரம் | 1012 ஆவது வாரம் | 3352 ஆவது வாரம் | 1194 ஆவது வாரம் | 1013 ஆவது வாரம் | 613 ஆவது வாரம் | 1014 ஆவது வாரம் |
| 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி | 2020 ஓகஸ்ட் 17ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி | 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி |
| ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து K | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து S |
| 40 55 73 74 | 02 29 39 43 | 11 23 33 51 | 27 44 57 74 | 12 36 71 74 | 09 12 14 43 | 24 40 47 59 |

# அரச வங்கிகளில் இடம்பெற்ற ஊழல் மோசடியை ஆராய நால்வரடங்கிய குழு நியமனம்

தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காகவும் அரச வங்கி கட்டமைப்பை வினைத்திறன் மிக்கதாக மற்றியமைப்பதற்கும், அரச வங்கிகளில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு நால்வரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில், நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய, 'கொவிட் - 19' நோய்த்தொற்றினால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள சவாலை எதிர்கொள்வதற்காக, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்கு பின்னர் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட இன்னும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தக் குழு ஆராயவுள்ளது.

எதிர்காலங்களில், நிதி ஊழல் அற்ற சிறந்த அதிகாரிகளை உருவாக்குவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும் இந்த குழுவுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவின் தலைவராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சிசிர ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளதோடு, மேலும், பட்டய கணக்காளர் சுசந்த டி சில்வா மற்றும் ஓய்வுபெற்ற மேலதிக கணக்காய்வாளர் டபிள்யூ. பிரேமநந்த ஆகியோரும் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இந்தக்குழுவின் செயலாளராக நிதி அமைச்சின் உறுப்பினர்கள் செயற்படுவார்கள்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு சேதாரம் இல்லை – அடித்துச் சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தேவையற்ற குழப்பங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமாக கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதாக விசனம் வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புதிய அரசாங்கத்திற்கு இதுவரை அவ்வாறான நோக்கங்கள் எதுவும் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை வெளியிட்டு மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பங்களை யாரும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை நேற்று நடைபெற்ற நிலையில், கடந்த ஆட்சியாளர்களினால் உருவாக்கப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் வகையில் 20 ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அண்மைய நாட்களாக 19 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகிய நிலையில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் இந்தியாவின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தினையும் இல்லாமல் செய்வதற்கு புதிய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சில தரப்புக்களினால் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்குறிப்பிட்ட கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசாங்கம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தினை ஏற்படுத்தி அதனூடாக அரசியல் நலன்களை அடைந்து கொள்ள முயற்சிக்கும் குறுகிய நலன் கொண்ட அரசியல் தரப்புக்களே இவ்வாறான உண்மைக்கு புறம்பான கருத்துக்களை பரவ விடுவதாக குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேலும், இவ்வாறான அடிப்படையற்ற கருத்துக்களை தொடர்பில் மக்கள் பதற்றமடையத் தேவையில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவனை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியர் கைது

பொலிஸ் விசாரணை பிரிவினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளினூடாக, 12 வயது மாணவனை துஷ்பிரயோகம் செய்த மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கணித பாடத்தை கற்பிக்கும் போர்வையில், மாணவனின் வீட்டுக்கு வந்த குறித்த ஆசிரியர் சில காலமாக மாணவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்து வருவதாக கடந்த ஜுலை மாதம் பொலிஸ் விசாரணை பிரிவினால் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, கடந்த 17ஆம் திகதி குறித்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

# கெஹலிய பேச்சாளர் – கம்மன்பில – பத்திரண இணைப்பேச்சாளர்கள்!

அமைச்சரவை பேச்சாளராக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நியமிக்கப்பட்டுள்ளார். இணை அமைச்சரவை பேச்சாளர்களாக அமைச்சர்கள் ரமேஷ் பத்திரண மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்று கூடிய கன்னி அமைச்சரவையில் இந்த தெரிவுகள் இடம்பெற்றன.



## 19ஐ...

**- நமது அரசியல் நிருபர் -**

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்கவும் 20 ஆவது திருத்த வரைபைத் தயாரிக்கவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடிய அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்து அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

புதிய அரசியலமைப்புத் திருத்தத்திற்கான இந்த யோசனையை நீதியமைச்சர் அலி சப்ரி, புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று முன்வைத்தபோது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

1. ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை 5 வருடங்களாக வரையறுத்தல்,
2. ஜனாதிபதியானவர் அந்த பதவியை வகித்தல் இரண்டு தடவைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தல்,
3. நாட்டுக்குகந்த அரசியலமைப்பைத் தயாரிக்க விசேட நிபுணர் குழுவொன்றை நியமிப்பதன் மூலம் சிறந்த அரசியலமைப்பொன்றை நிறுவுதல்,
4. அரசியலமைப்பின் நிபுணர் குழுவின் யோசனைகளை சட்ட வரைபாக்கம் செய்ய சட்ட வரைஞருக்கு அதிகாரத்தை வழங்குதல்,
5. தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் ஆலோசனையை பெற்று சட்ட வரைஞருக்கு தேவையான ஆலோசனைகளை நீதியமைச்சர் பெற்றுக் கொடுத்தல்,
6. சட்டமா அதிபரின் அனுமதியின் பின்னர் அந்த வரைபை வர்த்தமானியாக வெளியிடுதல் மற்றும் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக முன்வைத்தல்,
7. புதிய அரசியலமைப்புத் தயாரிப்புக்கான நிபுணர் குழுவை நியமித்தல்.

மேற்படி விடயங்களே நேற்றைய தினம் நீதி அமைச்சரால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 20 ஆவது அரசியலமைப்புத் திருத்த வரைபை தயாரிக்க அமைச்சர்கள் ஜீ.எல். பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, அலி சப்ரி, தினேஷ் குணவர்தன, உதய கம்மன்பில ஆகியோர் கொண்ட அமைச்சரவை உபகுழு நேற்று உடனடியாக நியமிக்கப்பட்டது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கமையவும், இப்போதைய ஆட்சியாளர்கள் வழங்கிய உறுதிமொழிக்கமையவும் அரசியலமைப்பி திருத்தம் உடனடியாக கொண்டு வரப்படுவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் மேற்படி யோசனையை முன்வைத்திருந்தார்.

## நிராகரிக்கப்பட்ட...

அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்திற்கு, விண்ணப்பித்திருந்த போதிலும் நியமனங்கள் கிடைக்காதவர்கள் மேன் முறையீடு செய்யும் பட்சத்தில் மீண்டுமொரு சந்தர்ப்பத்தினை வழங்க முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் வறுமைப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் ஒரு லட்சம் அரசாங்க வேலை வாய்ப்புக்கள் விரைவில் வழங்கி வைக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை நேற்று நடைபெற்ற நிலையில் குறித்த அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி தேர்தல் காலப் பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட உத்தரவாதத்திற்கு அமைவாக குறித்த வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பில் நேற்றைய அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதே ஜனாதிபதியினால் குறித்த உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வேலை வாய்ப்புக்களுக்கு நாடளாவிய ரீதியில் வறுமைப்பட்ட குடும்பங்களில் இருந்து சுமார் ஒரு இலட்சம் பேர் உள்வாங்கப்படவுள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சுமார் 700 பேரை சிபாரிசு செய்வதன் ஊடாக சரியானவர்களுக்கு குறித்த வேலை வாய்ப்புக்கள் கிடைப்பதை உறுதிப்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி எதிர்பார்ப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதேவேளை அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின் போது, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களும் விண்ணப்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளவர்களும் ஏமாற்றமடைந்துள்ள நிலையில் காணப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஏமாற்றமடைந்தவர்கள் மேன்முறையீடு செய்ய முடியும் என்றும் அவர்களில் சுமார் 10,000 பேர் தெரிவு செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- ஆர்ப்பாட்டக்காரர்களை சந்தித்த ஜனாதிபதி -**

இதேவேளை, வேலையற்ற பட்டதாரிகள் சிலர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அமைச்சரவை கூட்டம் நிறைவுபெற்று சென்றுகொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய, ஆர்ப்பாட்டக்காரர்களின் அருகில் தனது வாகனத்தை நிறுத்தி, அனைத்து பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்குவதாக குறிப்பிட்டார்.

"இப்போது வீடுகளுக்குச் செல்லுங்கள் மேலும் பத்தாயிரம் பேருக்கு தொழில் வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது" என்று ஜனாதிபதி ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கூறினார்.

## இனி 'காலுக்கும்'...

சில்லறையாக தனி சிகரெட் மற்றும் 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் விற்பனை ஆகியவற்றை தடை செய்யும் புதிய சட்டத்தை உருவாக்குமாறு புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்களுக்கு எதிராக இனி கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தேசிய அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் சமுதி ராஜபக்ஷ தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், மதுபான விற்பனையில் 180 மில்லி லீற்றர் அதிகளவில் விற்பனையாகிறது. இதனால் அதிகளவில் சமூக விரோத செயற்பாடுகளும், சுற்றுபுற சூழலும் பெரிதளவும் பாதிக்கப்படுகிறது. நாற்கூலி பெறுபவர்களின் அன்றாட தேவையாகவும் 180 மில்லி லீற்றர் மதுசார போத்தல்கள் காணப்படுகின்றன. தனி சிகரெட் விற்பனையை தடைசெய்ய வேண்டும் என்ற யோசனையை 2019ம் ஆண்டு அமைச்சரவையில் இரண்டுமுறை முன்வைத்தோம். ஆனால் எவ்வித முன்னேற்றகரமான தீர்மானங்களும் கிடைக்கப் பெறவில்லை. மதுபானம், புகைத்தல் ஆகியவற்றுக்கான வரி அதிகரிக்கப்பட வேண்டும். இவ்விரு விடயங்களினால் அரசாங்கம் ஒருபுறம் அதிக வருவாயை ஈட்டினாலும், இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு வருவாயை காட்டிலும் இரு மடங்கான நிதியை செலவிடுகிறது.

தனி சிகரெட் விற்பனை மற்றும், 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் விற்பனை ஆகியவற்றை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை புதிய அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம். சாதகமான தீர்வு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம். அத்துடன் வெற்றிலை கூறு விற்பனை தொடர்பிலும் மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## நாடாளுமன்ற கன்னி...

நாடாளுமன்றத்தின் முதல் அமர்வின் போது நடைபெறும் 10 முக்கிய நிகழ்வுகள் பின்வருமாறு.

1. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு இருக்கை ஒதுக்கப்படும் வரை உறுப்பினர்கள் எந்த இருக்கையிலும் அமரலாம்.
2. நாடாளுமன்ற பொதுச்செயலாளர் ஜனாதிபதி அனுப்பிய பிரகடனத்தை வாசிப்பார்.
3. 09 ஆவது நாடாளுமன்றம் அதன் தொடக்கக் கூட்டத்தைத் தொடங்குகிறது.
4. சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்.

★ எந்தவொரு உறுப்பினரும் சபாநாயகராக வேறு எந்த உறுப்பினரையும் முன்மொழிய வேண்டும்.

★ ஒரு உறுப்பினர் மட்டுமே முன்மொழியப்பட்டால், அந்த நபரை சபாநாயகராக அறிவிப்பார்.

5. சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்களிப்பு நடைபெறும். அதிக வாக்கு பெறுபவரை, நாடாளுமன்ற செயலாளர் சபாநாயகராக அறிவிப்பார்.
6. தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகர் தனது உத்தியோகப்பூர்வ உறுதிமொழிகளை ஏற்றுக்கொள்வார்.
7. ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரின் மேசையிலும் சத்தியப்பிரமாணம் செய்யும் தாள் வைக்கப்படிருக்கும். அதன்படி உறுதிமொழி எடுப்பார்கள்.
8. பின்னர் அவர்கள் சத்திய பிரமாண தாளில் கையெழுத்திடுவார்கள்.

நாடாளுமன்ற வருகை பதிவேட்டில் உறுப்பினர்கள் கையொப்பமிடுவார்கள்

9. நாடாளுமன்ற துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
10. குழுக்களின் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

துணை சபாநாயகர் மற்றும் குழுக்களின் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்கும் நடைமுறை ஒரு சபாநாயகரின் தேர்தலை ஒத்ததாக இருக்கும். தேர்தலை சபாநாயகர் நடத்த வேண்டும். இன்று பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதியின் கொள்கை விளக்க சிம்மாசன உரை நிகழ்த்தப்படும். பிறிதொரு நாளில் அதன்மீதான விவாதங்கள் இடம்பெற்று தேவைப்பட்டால் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

## புதிய நாடாளுமன்றில்...

புதிய நாடாளுமன்றத்தில் 80 வயதை கடந்த 4 பேர் அங்கம் வகிக்கிறார்கள். சம்பந்தனிற்கு அடுத்ததாக, திஸ்ஸ விதாரண (85), வாசுதேவ நாணயக்கார (81), க.வி.விக்னேஸ்வரன் (80) ஆகியோரோ புதிய நாடாளுமன்றத்தில் அதிக வயதானவர்கள். அதேசமயம் புதிய நாடாளுமன்றத்தின் மிகவும் வயது குறைந்தவராக ஜீவன் தொண்டமான் நியமனம் பெறுகிறார்.

## இரண்டு பேர்...

நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு இன்றைய தினம் (20) இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எங்கள் மக்கள் சக்தி கட்சி ஆகிய கட்சிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட இரண்டு ஆசனங்களே இவ்வாறு வெற்றிடமாகவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக இதுவரை எவரும் நியமிக்கப்படாத பின்னணியிலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஒருவர் சட்ட நடவடிக்கைகள் காரணமாக நியமிக்கப்படாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிக்கு குறுகிய காலம் வரை எவரையும் நியமிக்காது இருக்க அந்த கட்சியின் தலைமைத்துவம் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது குறித்த இரண்டு கட்சிகளுக்கும் தலா ஒவ்வொரு தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிகள் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெற்றிலைக்கூறின்...

சந்தையில் பாக்கின் விலை வெகுவாக அதிகரித்துள்ள நிலையில், வெற்றிலை கூறு ஒன்றின் விலை 50 ரூபா வரை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் 2 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பாக்கு தற்போது, 16 ரூபா முதல் 20 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஒரு ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட வெற்றிலை தற்போது 3 ரூபா முதல் 5 ரூபா வரை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் கூறுகின்றனர். வெற்றிலை கூறு ஒன்றின் விலை இதற்கு முன்னர் 20 ரூபா முதல் 30 ரூபா வரையான விலைக்கு விற்பனை செய்யப்பட்ட அதேவேளை, வெற்றிலை கூறு ஒன்றின் விலை 50 ரூபா வரை அதிகரித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இலங்கையின் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள வரட்சியுடனான காலநிலை காரணமாகவே விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பஹதஹேவாஹெட்ட மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் வெற்றிலை மற்றும் பாக்கு ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

கொட்டை பாக்கு ஒன்றின் விலை 6 ரூபாவாக தற்போது காணப்படுகின்ற போதிலும், அதனை நுகர்வோர் பெரிதாக விரும்புவதில்லை என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

வரட்சியுடனான காலநிலை மேலும் நீடிக்கும் பட்சத்தில் வெற்றிலை கூறொன்றின் விலை இன்னும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

வெற்றிலை கூறின் விலை அதிகரித்துள்ளமையினால், வெற்றிலை நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## திடீர் மின்தடை...

சுட்டிக்காட்டினார்.

அதேசமயம் இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்தால் இதற்குள் சதியொன்று இருப்பதுபோல தெரிகிறதென்று குறிப்பிட்டுள்ளார்.

சூரிய சக்தி மற்றும் மாற்று மின்வலு சக்தி திட்டங்களை அறிமுகப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்துவரும் சூழ்நிலையில் அதனை விரும்பாத யாரும் இந்த விடயத்தின் பின்னணியில் இருக்கக் கூடும். அதேபோல இதற்கென இராஜாங்க அமைச்சர் ஒருவரை நாங்கள் நியமித்தமை கூட அவர்களுக்கு திருப்தியில்லாமல் இருக்கலாம். எவ்வாறாயினும் இந்த விவகாரம் குறித்த விசாரணைகள் ஆய்வுகள் முடியட்டும். அடுத்தகட்டத்தை பார்ப்போம். இப்படி இனிமேலும் நடக்க இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி அங்கு தெரிவித்தாரென அறியமுடிந்தது.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

# இளவாலையில் பழைமையான சனசமூக நிலையம் எரிப்பு!



யாழ். இளவாலை- பண்டத்தரிப்பு சாந்தை கிராமத்திலுள்ள விநாயகர் சனசமூக நிலையம் நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களால் அடித்து நொருக்கப்பட்டதுடன், தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

1960ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட குறித்த சனசமூக நிலையம் நேற்று மாலை 2.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் அடித்து நொருக்கப்பட்டிருக்கின்றது.

இதன்போது 75இற்கும் மேற்பட்ட கதிரைகள், மின்சார இணைப்புகள், கூரைப்பகுதிகள் எரிந்து நாசமாகியுள்ளன. 60 வருட பழைமை வாய்ந்த இந்தப் பொக்கிஷம் எரிக்கப்பட்டதற்கு கிராம மக்கள் கடும் விசனத்தை தெரிவிக்கின்றனர்.

இதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வடபிராந்திய போக்குவரத்து முகாமையாளர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது!

(மன்னார் நகர்)

மன்னாரில் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இலங்கை போக்குவரத்து சேவையின் வட பிராந்திய முகாமையாளரை நேற்று மாலை மன்னார் நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரனைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் எம்.கணேசராஜா இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மன்றில் முன் வைத்த விண்ணப்பங்களை பரிசீலினை செய்த நீதவான் குறித்த நபரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு, அதே தினம், சிறைச்சாலை அதிகாரிகளூடாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாக்குமாறு உத்தரவிட்டார்.

இலங்கை அரச போக்குவரத்து சேவையின் வட பிராந்திய முகாமையாளர் மன்னாரில் வைத்து, நபர் ஒருவரிடம் முறைப்பாடொன்றை சீர்செய்வதற்காக 60,000 ரூபாவை இலஞ்சமாக பெற்றநிலையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# மோட்டார் சைக்கிள் – சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி; இருவர் காயம்!



யாழ்ப்பாணம் - வடமராட்சி, தொண்டைமானாறு 3ஆம் சந்தியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் பலியானதுடன், மேலும் இருவர் சிறுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் தொண்டைமானாறு 3ஆம் சந்தியை வசிப்பிடமாகக்கொண்ட உருத்திரன் திருவருட்செல்வன் (வயது 50) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே பலியாகியுள்ளார்.

அத்துடன், மேலும் இருவர் இலேசான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மரணமடைந்தவரின் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# மணிவண்ணன் தலைமையில் புதிய அணியா?

## – திரைமறைவு ஏற்பாடுகள் தீவிரம்!



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்ட வி.மணிவண்ணனை முன்னிலைப்படுத்தி புதிய அரசியல் அணியொன்றை கட்டியெழுப்பும் தீவிர முயற்சிகள் நடந்து வருவதாகவும் உள்ளூர், புலம்பெயர் தரப்புகளின் பின்னணியில் இதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவென்றும் அறியமுடிகின்றது.

இந்தியாவின் ஆளாக இருக்கலாம் என்ற முன்னணியின் பிரமை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை பதிவு செய்ய கோரியது உள்ளிட்ட காரணங்களின் பின்னணியில், மணிவண்ணன் கட்சியை விட்டு நீக்கப்பட்டார்.

அவருக்கு கட்சிக்குள் எந்த பொறுப்பும் இனி வழங்கப்படாது என குறிப்பிட்டு, அவரை நிரந்தரமாக கட்சியை விட்டு ஒதுக்கி வைக்கும் நடடிக்கையில் முன்னணி ஈடுபட்டது.

எனினும், இதுவரை தனது நீக்கம் பற்றி மணிவண்ணன் பகிரங்கமாக விளக்கமளிக்க வில்லை. இதுபற்றி ஓரிரு நாட்களில் அவர் விளக்கமளிக்கலாமென தெரிகிறது.

இந்நிலையில், மணிவண்ணனை முன்னிலைப்படுத்தி புதிய– இளைய அரசியல் அணியொன்றை கட்டியெழுப்பும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்வேறு கட்சிகளிலுள்ள இளைஞர்கள் அதிருப்தியுடன் உள்ளதை பயன்படுத்தி, அவர்களை உள்ளீர்த்து புதிய அணியொன்றை உருவாக்கலாமா என அந்த தரப்புகள் முயற்சித்து வருகின்றன.

இதற்காக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணியின்– தேசியளவில் முக்கிய பொறுப்பிலுள்ள – சிலருடனும் பேச்சு நடந்துள்ளது. அவர்களின் நாடி பிடித்தறியும் நோக்கத்துடன் இந்தச் சந்திப்பு நடந்தது. புலம்பெயர்ந்துள்ள சில தரப்புகளும், சில உள்ளூர் தரப்புகளும் இதன் பின்னணியில் உள்ளதாக தெரிகிறது.

இதில், கவனிக்கத்தக்க விடயம்– முன்னணியிலிருந்தே கணிசமான இளைஞர்களை கழற்றியெடுக்க வியூகம் வகுக்கப்பட்டு வருவதாகும்.

# கட்டாக்காலி மாடுகளால் விபத்துகள் அதிகரிப்பு

(வவுனியா)



வவுனியா நகர பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் நகரின் அழகு சீர்குலைவதுடன் போக்குவரத்துக்கும் பல்வேறு நெரிசல் தினசரி ஏற்படுகின்றது.

குறிப்பாக, வவுனியா நகரம், வவுனியா – மன்னார் பிரதான வீதி, பட்டனிச்சூர், வேப்பங்குளம், குருமன்காடு சந்தி போன்ற பகுதிகளில் நடுவீதிகளில் கால்நடைகள் நிற்பதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், விபத்துகளும் ஏற்படுகின்றன.

கட்டாக்காலி மாடுகளால் கடந்த மாதத்தில் மாத்திரம் 10இற்கு மேற்பட்ட விபத்துகள் ஏற்பட்டுள்ளன. கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த நகரசபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழன்
தமிழன்
தமிழன் தினசரி மற்றும் வாராந்த பத்திரிகையில் 6.2cm X 3cm அளவில் சிறுவிளம்பரங்களை பிரசுரித்திட 600 ரூபா மட்டுமே.
தொடர்புகளுக்கு:
077 693 0739, 076 139 3805

# கொரோனா தடுப்பூசியை பணக்கார நாடுகள் பதுக்கக்கூடாது

## போப் பிரான்சிஸ் வலியுறுத்து



பணக்கார நாடுகள், கொரோனா தொற்றுக்கான தடுப்பூசியை பதுக்கி வைக்கக்கூடாது என போப் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வத்திக்கான் தேவாலயத்தில் பொது மக்களுக்கு ஆற்றிய உரையில், கொரோனா தடுப்பூசி போடுவதில் பணக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டாலோ அல்லது அந்தத் தடுப்பூசி ஒரு நாட்டின் தனிச்சொத்தாக மாறினாலோ, இரண்டுமே வருத்தப்படவேண்டிய விடயங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா தடுப்பூசி, உலக மக்கள் அனைவருக்குமானதாக இருக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# மாலியில் இராணுவப் புரட்சி: பதவியை துறந்தார் கெய்டா

★ துப்பாக்கிமுனையில் ஜனாதிபதி - பிரதமர் சிறைப்பிடிப்பு

★ நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்கக் கோருகிறது ஐ.நா.



மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஆட்சியை இராணுவ கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் பவுபகர் கெய்டாவையும், பிரதமர் பவ்பவ் சிசியையும் துப்பாக்கிமுனையில் கிளர்ச்சியாளர்கள் சிறைபிடித்துள்ளனர்.

மாலியில் ஊழல் மற்றும் மோசமான நிர்வாகம் ஆகியவற்றைக் கண்டித்து அரசுக்கெதிராக கிளர்ச்சியாளர்கள் பல மாதங்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். மாலி ஜனாதிபதியை பதவி விலகக்கோரி தீவிரமடைந்த போராட்டத்தில் இராணுவமும் இணைந்தது.

இந்நிலையில், நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பாமாக் கோவிலுள்ள மைய சதுக்கத்தில் ஊடுருவி அப்பகுதியைக் கைப் பற்றினர். அவர்களைத் தடுக்க பிரெஞ்சு படைகள் தலையிட்ட போதும் அந்த முயற்சி தோல்வியைத் தழுவியது.

இந்நிலையில், போராட்டம் தீவிரமடைவதை உணர்ந்த ஜனாதிபதி கெய்டா தொலைக்காட்சியில் தோன்றி தனது இராஜினாமா அறிவிப்பை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இராஜினாமா செய்த கைடாவை ஆர்ப் பாட்டக்காரர்கள் துப்பாக்கிமுனையில் கைதுசெய்தனர்.

கிளர்ச்சியில் ஈடுபட்ட இராணு வத்தினருக்கு தலைமை வகித்தது யார்? அடுத்து ஆட்சிக்கு தலைமை வகிக்கப்போவது யார்? என்பது குறித்து தகவல் இல்லை. இதனிடையே ஜனாதிபதி கெய்டா மற்றும் பிரதமர் பவ்பவ் ஆகியோரை உடனடியாக நிபந்த னையின்றி கிளர்ச்சி யாளர்கள் விடுவிக்க வேண்டுமென ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் வலியுறுத்தியுள்ளார்.



1 TEAM 1 NATION
Sri Lanka Cricket

ஆர்வ வெளிப்பாடுகளுக்கான (EOI) அழைப்பு

**சர்வதேச கிரிக்கட்டினது (எல்லையற்ற சுற்றுலாக்கள்) எதிர்கால கிரிக்கட் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இங்கிலாந்து கிரிக்கட் அணி மேற்கொள்ளும் இலங்கை கிரிக்கட் சுற்றுலாவை முன்னிட்டு ஊடக மற்றும் சம்பந்தப்பட்ட உரிமைகளுக்கான ஆர்வ வெளிப்பாடுகள் அழைப்பு (செப்டெம்பர் 2020 முதல் மார்ச் 2023 வரை)**

சர்வதேச கிரிக்கட் (எல்லையில்லாத சுற்றுலாக்கள்) எதிர்கால கிரிக்கட் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டத்தின் இங்கிலாந்து கிரிக்கட் அணியின் இலங்கை சுற்றுலா போட்டி நிகழ்வுகள் 2020 செப்டெம்பர் முதல் மார்ச் 2023 வரையில் நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் கிரிக்கட் இந்த கிரிக்கட் தொடர்பான சர்வதேச தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பு உரிமைகள், இணையத்தள உரிமைகள், மொபைல் உரிமைகள், பந்தய உரிமைகள், விளையாட்டு உரிமைகள் In-flight உரிமைகள், ஊடக அனுசரணை உரிமைகள், Commercial Airtime உரிமைகள், Virtural Advertisitg உரிமைகள், கிரபிக் உரிமைகள், நிலையான ஊடக உரிமைகள், சமூக ஊடக உரிமைகள், Archive உரிமைகள், Clip Rights, பொதுத்திரையிடல் உரிமைகள், திரைப்பட உரிமைகள் மற்றும் செய்திகள் தொடர்பான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வமுள்ள பிரசித்தி பெற்ற ஊடகங்கள் மற்றும் (சந்தைப்படுத்தல், விளம்பர சேவை மற்றும் PR முகவர்கள் உட்பட) முகவர் நிறுவனங்களிடமிருந்து "ஆர்வ வெளிப்பாடுகளைக் கோரியுள்ளது."

**உரிமைகள் பற்றிய விபரங்கள் :**

கேள்வி அழைப்புக்கான பத்திரங்களுடன் உரிமைகள் பற்றிய விபரங்கள் அடங்கிய பத்திரம் இலங்கை கிரிக்கட் தொடர்பான தேவைகள் மற்றும் கேள்விகளை சமர்ப்பித்தல் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியன அடங்கிய பத்திரங்களை ஆர்வம் காட்டும் நிறுவனங்களுக்கு இலங்கை கிரிக்கட் வழங்கும்.

**ஆர்வ வெளிப்பாடுகளை சமர்ப்பிக்கும் முறை :**

இதில் ஆர்வமுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் அவர்களின் எழுத்து மூலமான ஆர்வ வெளிப்பாட்டுக்கான விண்ணப்பத்தை 'தலைமை நிறைவேற்று அதிகாரி', இலங்கை கிரிக்கட், இல, 35, மைட்லன்ட் ப்ளேஸ், கொழும்பு 07. இலங்கை என்ற முகவரிக்கு அல்லது slctenders@srilankacricket.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2020 ஆகஸ்ட் 26ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**கட்டுப்பாடுகள்:**

புகைத்தல் மற்றும் மதுவகை (போதையுள்ள மற்றும் போதையில்லாத) பந்தயம், இணையம் மூல பந்தயம் மற்றும் சூதாட்டம் தொடர்பிலான நிறுவனங்கள் இந்த ஆர்வ வெளிப்பாடு முறைகளில் பங்குபற்றும் தகைமையைப் பெறமாட்டார்கள்.

இலங்கை கிரிக்கட் எந்தவகை காரணமும் தெரிவிக்காமல் எந்தவொரு நேரத்திலும் இந்த ஆர்வ வெளிப்பாடு அழைப்பை இரத்துசெய்யும் அல்லது மாற்றும் முழுமையான உரிமையை உடையதாகும்.

**தலைமை நிறைவேற்று அதிகாரி
இலங்கை கிரிக்கட்**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com
2020 ஓகஸ்ட் 20ஆம் திகதி, வியாழக்கிழமை

# பாவம் தோட்டத் தொழிலாளி!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகம் தொண்டமான், இப்போதைய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் குடும்ப உறுப்பினர்கள் பயன்படுத்திய வெவண்டன் பங்களா தீக்கிரையான செய்தியை ஊடகங்களில் காணமுடிந்தது. அதேபோல அந்த அதிகாலை வேளையிலும் தீயணைப்புப் படைவீரர்கள் அங்குசென்று தீப்பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதையும் அத்துடன் பார்க்கக்கூடியதாக இருந்தது. இதனைப்பற்றி ஆராய்வது எமது இந்தத் தலையங்கத்தின் நோக்கமல்ல. இதையொட்டிய சில விடயங்களை வலியுறுத்த விரும்புகிறோம்.

மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்கள் காலனித்துவ காலத்திலிருந்து இன்றுவரை எட்டடி அறைகொண்ட காம்பிரா என்று சொல்லப்படும் குருவிக்கூடுகளில் வாழ்க்கை நடத்திவருகின்றனர். பல தசாப்த காலமாக குப்பி லாம்பு வெளிச்சத்தில் வாழ்ந்த அவர்களில் கணிசமானோருக்கு மின்சார வசதி கிடைத்ததே அண்மைக்காலத்தில்தான். அப்படி மின்சாரம் கிடைத்தாலும் லயன் வீடுகளில் வயரிங் வேலைகள் முறையாக செய்யப்படாத காரணத்தால் கடந்த காலங்களில் ஏராளமான லயன் குடியிருப்புகளில் தீப்பரவல் சம்பவங்கள் நடந்தன.

இந்த தீப்பரவல் சம்பவங்களால் தொழிலாளர்களின் உடைமைகள், அவர்களின் பிள்ளைகளின் கல்விச் சான்றிதழ்கள், குடும்பத்தின் முக்கியமான ஆவணங்கள் என்று பல தஸ்தாவேஜுகள் எரிந்து நாசமாகிய படங்களை ஊடகங்களில் அடிக்கடி எம்மால் காணமுடிந்த அதேசமயம், அவற்றிற்கு ஆறுதல் சொல்ல அரசியல்வாதிகள் சென்று நீலிக்கண்ணீர் வடிப்பதையும் பார்க்க முடிந்தது. அந்த மக்களின் துன்பத்திலும் அரசியல் செய்வதற்கு எமது தலைவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டுமா என்ன?

சரி. அப்படியான நிலைமை இருந்த கடந்த காலங்களில் என்றாவது ஒருநாள் தீப்பரவல் ஏற்பட்ட இடங்களுக்கு தீயணைப்புப் படை வாகனங்கள் இவ்வாறு சென்றிருக்குமா? இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்குமா? தேடினால் அதற்குப் பதில் இல்லை. அவர்கள் தொழிலாளர்களாச்சே? அடிமைகள் அல்லவா? அவர்கள் எக்கேடு கெட்டால் என்ன என்ற பார்வைதானே இதற்குக் காரணம். இதற்கு யார் பதில் சொல்வது?

தொழிலாளர்களின் இந்த நிலைமைக்கு யார் காரணம்? சாதாரண தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றப்போவதாக வாய் கூசாமல் பொய் சொல்லும் மலையக அரசியல்வாதிகள், முதலில் இவ்வாறான சாதாரண பிரச்சினைகளையாவது தீர்த்து வைத்து மலையக மக்களும் இதர மக்கள் குழாமைப் போன்று சமவுரிமைகளைப் பெற தகுதியானவர்கள் என்பதை நிறுவவேண்டும். சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றப்போவதாக இந்த அரசியல்வாதிகள் மலையகத் தொழிலாளர்களை கூறுவது அரசியல் சந்தர்ப்பவாத காரணங்களுக்காகவேயன்றி அது ஒருபோதும் நடைமுறைச் சாத்தியமற்ற விடயம் என்பதை அழுத்தமாக சொல்லிவைக்க விரும்புகிறோம்.

கடந்த காலங்களில் மலையக லயன்களில் இடம்பெற்ற தீப்பரவல் சம்பவங்களின்போது படம் காட்டுவதற்காக அங்கு சென்ற எந்தவொரு அரசியல்வாதியாவது, அந்தத் தொழிலாளர்களது பிள்ளைகளின் அழிந்துபோன ஆவணங்களை மீளவும் பெற்றெடுக்க எந்த ஏற்பாடுகளையாவது செய்திருப்பார்களா? இல்லை. ஆக மலையக தொழிலாளர் வர்க்கத்தை அடிமையாக வைத்திருப்பதுதான் இவர்களது நோக்கம். அப்போதே அவர்களுக்கு அரசியல் நடத்தலாம் அப்படித்தானே? இதற்கு உதாரணம், இவ்வகையான தீப்பரவல் சம்பவங்களே என்பதைவிட வேறெவற்றை சொல்லிவிட முடியும்.

மலையகத்தின் இந்த அடிமைத்தன நிலைமை மாறவேண்டுமானால் அந்த மாற்றம் மக்களின் மனங்களிலிருந்து வரவேண்டும் என்பதையே சொல்லிவைக்க விரும்புகிறோம். அரசியல்வாதிகளின் அடிமைகளாக அவர்கள் இருக்கும் வரை மலையகச் சமூகம் ஒரு அங்குலம் கூட முன்னே செல்லாது. இல்லாவிடில் பாவம் தோட்டத் தொழிலாளி என்றே சொல்லவேண்டும்!

**"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**

# புதிய ஆட்சியில் மேலோங்கும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகள்

- எம்.எஸ்.அமீர் ஹுசைன் -

புதிய ஆட்சி மலர்ந்து இரண்டு வாரங்களாகின்றன. பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்துடனான அமைச்சரவையும் நியமிக்கப்பட்டிருப்பதோடு, 9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று 2020 ஓகஸ்ட் 20ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு ஜனாதிபதியால் கொள்கை விளக்க பிரகடன உரையான சிம்மாசனப் பிரசங்கத்துடன் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றது. இந்நிலையில், இந்த ஆட்சி குறித்து இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் உணர்வலைகளும் எதிர்பார்ப்புகளும் மாற்றமடைந்து வருகின்றன.

பொதுத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான கூட்டணி சிறுபான்மையினரது காலைப் பிடிக்காமல் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெற்று ஆட்சியமைத்திருக்கின்றது. இந்த நாடாளுமன்றத்தில் இலங்கை முழுவதிலுமிருந்து பொதுத் தேர்தல் மூலமாகவும் தேசியப்பட்டியல் மூலமாகவும் மொத்தம் 21 முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவாகியுள்ளனர். இவர்களில் பொதுஜன பெரமுன சார்பாக – தேசியப்பட்டியல் மூலமாக நியமிக்கப்பட்ட மூன்று பேரைத் தவிர, தேர்தலில் அந்த அணி சார்பாக போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் எவரும் தெரிவாகவில்லை. கண்டி, திகாமடுல்ல, திருகோணமலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்ட 7 பேரில் எவரும் தெரிவாகவில்லை.

ஆனாலும் வன்னி மாவட்டத்திலிருந்து தெரிவாகிய காதர் மஸ்தான் ஸ்ரீல.சு.கட்சியைச் சேர்ந்தவராவார். அதேநேரம் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் அவரது கட்சியான தேசிய காங்கிரஸை சேர்ந்தவராவதோடு, அவரும் ஸ்ரீல.சு.கட்சிக்கு சார்பானவராவார். அதனால் இந்த அரசாங்கத்தில் தேசியப்பட்டியல் மூலம் நியமனம்பெற்ற அலி சப்ரி, தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மொஹமட் முஸம்மில் மற்றும் மர்ஜான் பழீல் ஆகிய மூன்று பேருமே பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் பிரதிநிதிகளாகின்றனர். ஆனாலும் பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் இருக்கும் ஒரே அமைச்சரவை அந்தஸ்துள்ள முஸ்லிம் அமைச்சர் அலி சப்ரி மாத்திரமாவார்.

இந்நிலையில், தேர்தல் முடிவடைந்து பேரினவாத சக்திகளுக்கு படுதோல்வி ஏற்பட்டாலும் சட்டத்தரணி அலி சப்ரிக்கு நீதி அமைச்சர் பதவியை வழங்க வேண்டாம் என்று சில சிங்களப் பேரினவாதத்தை தூண்டும் சக்திகள் சமூக ஊடக வலைப்பின்னல்கள் வாயிலாக தகவல்களை பரிமாறி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் ஜனாதிபதி தைரியமாக அந்தப் பதவியை வழங்கியுள்ளார். அலி சப்ரிக்கு தேசிய பட்டியலில் இடம்கொடுக்க வேண்டாம் என்று கூட சில பிக்குமார் போர்க்கொடி தூக்கினர். அந்தக் கோஷங்கள் எதுவும் எடுபடவில்லை.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தைரியத்தையும் துணிச்சலையும் பாராட்ட வேண்டும். இந்த நாட்டை சிறப்பான முறையில் ஆட்சிசெய்வதற்கும் தேவைப்படுவது இப்படியான ஆட்சித் திறனுக்கான ஆளுமையும், துணிச்சலும், தைரியமுமாகும். இலங்கையில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிகளில் ஜே.ஆர்.ஜெயவர்தன, ஆர்.பிரேமதாஸ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் வரிசையில் கோட்டாபய ராஜபக்ஷவும் அத்தகைய ஆளுமையையும் துணிச்சலையும் கொண்டவர் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. ஆனாலும் கடந்த 2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த நல்லாட்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமோ பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடமோ இந்தத் துணிச்சலை காணமுடியவில்லை. அப்போதைய ஆட்சியின் மிக மோசமான பலவீனமாக அமைந்தது நாட்டின் தலைவர்களாக இருந்த இருவரிடமும் இந்தத் துணிச்சலும் ஆளுமையும் காணப்படாமையாகும்.

### முஸ்லிம் சமூகத்தின் ஆர்வம்

ஜனாதிபதித் தேர்தலில் நாட்டில் முஸ்லிம்கள் மஹிந்த ஆட்சியில் அதிருப்திகொண்டிருந்ததால் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களித்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் சட்டத்தரணி அலி சப்ரியைத் தவிர, வேறு யாரும் பொதுஜன பெரமுன கட்சியின் பக்கம் இருக்கவில்லை. ஆனாலும் நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தின் சுமார் 10 இலட்சம் அளவான வாக்குகளில் அதிகமான முஸ்லிம்கள் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சியின் வெற்றிக்காகவே வாக்களித்துள்ளனர். கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டம், மட்டக்களப்பு உட்பட பல பிரதேசங்களிலும் கணிசமான முஸ்லிம் வாக்குகள் மஹிந்த அணியின் பக்கம் சார்ந்திருந்தன.

**“சஜித் பிரேமதாஸவால் இம்முறை 27 இலட்சத்துக்கும் அப்பால் வாக்குகளைப் பெறமுடியாமல் போனதற்கான காரணம் ஐ.தே.க.வுக்குள் ஏற்பட்ட பிளவு என்பதைவிட முஸ்லிம்கள் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை பலப்படுத்தும் வகையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சிக்கே வாக்களித்துள்ளனர் என்பதை தெளிவாகக் கூறலாம்”**

தேர்தல் முடிவுகளின்படி ஜனாதிபதித் தேர்தலில் 56 இலட்சதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்ற சஜித் பிரேமதாஸவால் இம்முறை 27 இலட்சத்துக்கும் அப்பால் வாக்குகளைப் பெறமுடியாமல் போனதற்கான காரணம் ஐ.தே.க.வுக்குள் ஏற்பட்ட பிளவு என்பதைவிட முஸ்லிம்கள் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை பலப்படுத்தும் வகையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சிக்கே வாக்களித்துள்ளனர் என்பதை தெளிவாகக் கூறலாம். ஏற்கனவே ஐ.தே.க. அதிகமான வாக்குகளைப் பெறும் முஸ்லிம்கள் கணிசமாக வாழும் பிரதேசங்களில் பொதுஜன பெரமுன தலைமையிலான அணி ஆகக்கூடுதலான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளன.

### முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு என்ன?

அவ்வாறாயின், மலர்ந்துள்ள ராஜபக்ஷக்களின் ஆட்சியில் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு என்ன என்பது பிரதான வினாவாகும். இந்நாட்டில் இரண்டாவது சிறுபான்மையினராக முஸ்லிம்கள் வாழ்ந்துவருகின்றனர். ஆனாலும் இந்நாட்டில் வாழும் ஏனைய எல்லா இனங்களுக்கும் சமமானவர்களாகவே முஸ்லிம் சமூகம் வாழ்ந்து வருகின்றது. சிறுபான்மையினர் என்று எந்த ஆட்சியாளர்களாலும் அல்லது அரசாங்கங்களாலும் ஒதுக்கப்பட்ட சமூகமாக முஸ்லிம்கள் எந்தவொரு யுகத்திலும் வாழ்ந்தவர்கள் அல்ல. மொத்த சனத்தொகையில் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருந்தாலும் இனம் என்ற அடிப்படையில் ஏனைய இனங்களால் அனுபவிக்கின்ற அனைத்து உரிமைகள், சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களுக்கு உரித்துடையவர்களாக முஸ்லிம்கள் உள்ளனர்.

**“ஏனைய இனங்களைப்போன்று முஸ்லிம் சமூகம் அரசாங்கத்தில் அதிகமான தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் அல்லது உயர் பதவிகள் வழங்கப்படவேண்டும் என்று கையேந்தி நிற்கும் சமூகமும் அல்ல. இந்நாட்டில் முஸ்லிம் சமூகம் சுமார் 1,200 வருடங்களுக்கு மேலான வரலாற்றைக்கொண்ட சமூகமாக வாழ்ந்து வந்தாலும் எப்போதும் சொந்தக்காலில் நிற்கும் சமூகமாகவே இருந்துவருகின்றது”**

அதேநேரம், ஏனைய இனங்களைப்போன்று முஸ்லிம் சமூகம் அரசாங்கத்தில் அதிகமான தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் அல்லது உயர் பதவிகள் வழங்கப்படவேண்டும் என்று கையேந்தி நிற்கும் சமூகமும் அல்ல. இந்நாட்டில் முஸ்லிம் சமூகம் சுமார் 1,200 வருடங்களுக்கு மேலான வரலாற்றைக்கொண்ட சமூகமாக வாழ்ந்து வந்தாலும் எப்போதும் சொந்தக்காலில் நிற்கும் சமூகமாகவே இருந்துவருகின்றது. அதனால்தான் வியாபார வர்த்தக வாணிபத்தை தமது சொந்த தொழிலாக செய்துவந்திருப்பதை வரலாற்று ரீதியாக காணலாம். இருந்தாலும் 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சி காரணமாக புதிய அறிவுசார் துறைகளில் தங்கியவர்களாக அவர்கள் உள்ளனர். இருந்தாலும் எந்தவொரு அரசாங்கத்திற்கும் தொந்தரவாக அல்லது சுமையாக இருந்த சமூகம் அல்ல.

இந்நிலையில், இலங்கையை ஆண்ட போர்த்துக்கேயருக்கு அடுத்ததாக வந்த ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் காலம் முதல் படிப்படியாக அரசியல் பொருளாதார, மத, கலாசார உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவித்துவரும் ஒரு சமூகமாக இருந்து வருகின்றது. இவ்வாறாக பார்க்கும்போது முஸ்லிம் சமூகம் அனுபவிக்கும் இத்துறைகளிலான உரிமைகள் படிப்படியாக அதிகரித்து பலமடைந்து வந்திருக்கின்றதே தவிர, எந்தவொரு காலகட்டத்திலும் குறைக்கப்பட்டோ அல்லது இல்லாதொழிக்கப்பட்டதாகவே அமையவில்லை.

ஆனாலும் 2010ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் சிங்கள – பௌத்த சமூகத்தில் தோன்றிய சில தீவிர பௌத்த சிந்தனைவாதிகளின் (அனகாரிக தர்மபாலவின் சிந்தனைகளால் கவரப்பட்ட) கோஷமாக இருந்துவருவது இந்நாட்டில் முஸ்லிம்களின் உரிமைகளை பறிக்க வேண்டும், அவர்களை அரசியல் ரீதியாக பலமிழக்கச் செய்யவேண்டும், நாடாளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கவேண்டும். இந்நாட்டில் அடிமைச் சமூகமாக மாற்றி காலால் மிதிக்க வேண்டும். சிங்கள – பௌத்த பேரினவாதிகள் சொல்லுகின்றபடி வாழமுடியாவிட்டால் அரபு நாட்டுக்கே திருப்பி அனுப்பவேண்டும் என்றெல்லாம் கோஷங்களை எழுப்பி வருகின்றனர். இப்படிப்பட்ட இனவாதிகளுக்கு 2019 ஏப்ரல் குண்டுவெடிப்பு மேலும் சாதகமானதாக அமைந்துவிட்டது. அதனை காரணமாக வைத்து முஸ்லிம் மற்றும் இஸ்லாமிய விரோதச் செயற்பாடுகளை மேலும் உக்கிரமடையச் செய்தனர்.

இந்தத் தேர்தலை அதற்கான களமாக மாற்ற முயற்சிசெய்தனர். ஆனாலும் அந்த முயற்சியில் இறங்கிய அவர்களில் எவருக்கும் ஒரு ஆசனம் கூட கிடைக்காத அளவுக்கு படுதோல்வியடைந்தனர். அபே ஜனபல கட்சிக்குள் ஞானசார தேரருக்கும் அத்துரலியே ரத்ன தேரரின் குழுவுக்கும் இடையில் அடிதடி, குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. அக்கட்சிக்குக் கிடைத்த ஒரே தேசியப்பட்டியல் ஆசனத்தை பங்கு போடுவதற்காக அடிதடியில் ஈடுபட்டு அந்தச் சண்டை சமூக ஊடகங்கள் வாயிலாக முழு நாட்டுக்கும் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றதை அவதானிக்க முடிகின்றது. இந்த முயற்சிகளானது முஸ்லிம்களை பயம்காட்டி அடக்கி ஒடுக்கலாம் என்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குக் கிடைத்த தோல்வியும் பின்னடைவுகளுமாகும்.

இவ்வாறான ஒரு நிலையில், புதிய மஹிந்த யுகத்தில் முஸ்லிம்கள் முற்றிலும் வித்தியாசமான ஒரு ஆட்சிக் கொள்கையை எதிர்பார்க்கின்றனர். முஸ்லிம் சமூகம் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் 2014 இறுதி வரையில் சிங்கள – பௌத்த பேரினவாதிகளால் அனுபவித்த துன்பங்கள் மீண்டும் அரங்கேற ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய நாட்டின் தலைவர்கள் இடமளிக்கக்கூடாது.

இப்போது அமைச்சர் பதவி வழங்கப்பட்ட பின்னரும் சிங்ஹலயே ராவய அமைப்பு போன்ற இலட்சியம் இல்லாத சிங்கள – பௌத்த பேரினவாத அமைப்பைச் சேர்ந்த பிக்குமார் சிலர் அலி சப்ரி பதவி விலகவேண்டும் என்று போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இவ்வாறான முஸ்லிம் சமூகத்தை ஏதாவதொரு வகையில் நசுக்க வேண்டும் என்பது இத்தகைய அமைப்புகளது திட்டமாகும். பௌத்த சமூகத்தில் இத்தகைய சக்திகள் பிரபல்யமடைவதற்காக ஊடகங்கள் வாயிலாக முஸ்லிம் விரோத கருத்துகளை விதைத்து நாசகார நடவடிக்கைகளைத் தூண்டுவதும் இதன் பின்னணியாக இருந்துவருகின்றது.

ஏற்கனவே இலங்கையில் தலைவிரித்தாடுகின்ற பேரினவாத பௌத்த தீவிர போக்காளர்கள் இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம் சமூகம் குறித்து பொறாமையுடனும் காழ்ப்புணர்வுடனும் பார்த்து வருகின்றனர். இந்நாட்டில் முஸ்லிம் சமூகம் கடந்த 150 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருகின்ற இஸ்லாமிய தனியார் சட்டங்கள், அரசியல், பொருளாதார மற்றும் மத ரீதியான உரிமைகளை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் இந்நாட்டின் பொதுவான சட்டங்களுக்கு கட்டுப்பட்ட சமூகமாக மாற்றியமைக்க வேண்டும் என்றும் கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

5ஆம் பக்கம் பார்க்க....

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொண்ட விவகாரத்தால் எழுந்த சர்ச்சை இன்னும் ஆளுங் கட்சிக்குள் அடங்கவில்லை. சில இராஜாங்க அமைச்சர்கள் விரும்பியும் விரும்பாமலும் வேலை... இன்னும் சிலர் அமைச்சே கிடைக்கவில்லை என்று புலம்பல்... தேர்தல் காலத்தில் மக்களுக்காக எதையும் செய்யத் தயாரென சொல்லும் இந்த அரசியல் வாதிகள் பதவிகளுக்காக பாடாய்ப்படுவதை பார்க்கையில் எரிச்சல் வருகிறது... சரி பதவி கிடைத்தால்தானே வேலைகளை செய்யலாம்? என்று யாரும் கேட்கலாம்... பதவி கேட்பது வேலை செய்வதற்கல்ல... அடுத்தமுறை விருப்பு வாக்குகளை கூட்டிக்கொள்வதற்கே... விருப்பு வாக்குகளை கூட்டிக் கொள்ளவென வேலைசெய்தவர்களே படுதோல்வியை சந்தித்தனரே... அப்படி நடந்துமா பதவிகளுக்கு இந்த அடிபிடி...!

- சிவா -
siva@liberty.lk

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# அடுத்த ஐந்து வருடங்களுக்குள் பால் உற்பத்தியில் தன்னிறைவு



## பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி கூட்டத்தில் பசில் அறிவிப்பு

- ★ தனியார்துறையின் பங்களிப்புடன் கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் 10 பாரியளவிலான பால் பண்ணைகள்...
- ★ சிறிய அளவிலான பால் பண்ணைகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை...
- ★ தோட்ட நிறுவனங்களின் பயனற்ற நிலங்களை பால் பண்ணை துறைக்கு பயன்படுத்த உதவுதல்...
- ★ விலங்கு தீவனத்திற்காக மக்காச்சோள செய்கைக்கென அரச நிலங்களை வருடாந்த குத்தகை அடிப்படையில் பால் பண்ணை உரிமையாளர்களுக்கு வழங்குதல்....

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் இந்நாட்டின் பால் உற்பத்தியை நாட்டின் பால் தேவையை பூர்த்திசெய்யும் அளவுக்கு மேம்படுத்துவதாகவும், அதை நுகர்வுக்கப்பால் ஏற்றுமதி மட்டத்திற்கு கொண்டுவருவதற்கு அரசாங்கத்தின் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பால் உற்பத்தித்துறையுடன் தொடர்புடைய அமைச்சர்கள் உள்ளிட்ட அத்துறை சார்ந்த அரச நிறுவனத் தலைவர்களுடன் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி செயலணி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன்படி உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பத்து பாரியளவிலான பால் பண்ணைகள் மற்றும் சிறிய அளவிலான பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பால் தேவை 1,200 மில்லியன் லீற்றராகும். தற்போது உற்பத்திசெய்யப்படும் பாலின் அளவு 420 மில்லியன் லீற்றராகும். எஞ்சிய தேவையான பாலின் அளவு 780 மில்லியன் லீற்றர் என்றபோதிலும், திரவப் பால் பயன்பாட்டுக்கு மக்களை பழக்கப்படுத்தினால், மேலும் 400 மில்லியன் லீற்றர் பாலை கொண்டு உள்ளூர் தேவையை பூர்த்திசெய்ய முடியும். ஒரு கிலோகிராம் பால் மாவை உற்பத்திசெய்வதற்கு சுமார் 8 லீற்றர் திரவப் பால் தேவைப்படுகிறது. அதன்படி, ஒரு கிலோகிராம் பால் மாவிலிருந்து தயாரிக்கக்கூடிய பால் கிண்ணங்களின் அளவை விட 8 லீற்றர் திரவப் பாலிலிருந்து தயாரிக்கக்கூடிய பால் கிண்ணங்களின் அளவு மிக அதிகம்.

பால் விலை, பால் பசுக்களை இறக்குமதி செய்தல், புல்வெளிகளைப் பாதுகாத்தல், மக்காச் சோளம் சாகுபடிசெய்தல் மற்றும் அதற்கான நிலம் ஒதுக்கீடுசெய்தல், மக்காச்சோளம் சாகுபடியின் வெற்றிக்கு பயனுள்ள விதைகளை இறக்குமதிசெய்து உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மக்காச்சோளத்தின் உற்பத்தித்திறனை ஒரு ஹெக்டேயருக்கு 3.8 மெட்ரிக் தொன்னிலிருந்து 7 மெட்ரிக் தொன் வரை உயர்த்தவேண்டும்.

அதன்படி, எதிர்வரும் பருவத்தில் பால்பண்ணையாளர்களுக்கு அவசியமான மக்காச்சோளம் பயிரிடத் தேவையான நிலங்களை விடுவிப்பது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட துறையினருக்கு ஆலோசனை வழங்கினார்.

கொழும்பு, கம்பஹா போன்ற நகர்ப்புறங்களில் தூய்மையான பால் நுகர்வை அதிகரிக்கவும், அதற்கேற்ப பால் சார்ந்த உற்பத்தித்துறைகளை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறித்த நிகழ்வில் கமத்தொழில்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர்களான ஜானக வக்கும்புர மற்றும் கனக ஹேரத் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# 19இன் ஜனநாயகத் தன்மையை பாதிக்கும் வகையிலான திருத்தங்களுக்கு இடமளியோம்



## நளின் பண்டார தெரிவிப்பு

புதிய அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்குவது தொடர்பில் அரசாங்கத் தரப்பின் கருத்துகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காகவே கடந்த நல்லாட்சி அரசாங்கம் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டு வந்தது. மேற்படி அரசியலமைப்புத் திருத்தத்தை இந்த அரசாங்கம் மாற்றியமைக்க முயற்சிக்குமாக இருந்தால் அது ஜனநாயகபூர்வமானதாகவே இருக்கவேண்டும். அவ்வாறு திருத்தியமைப்பதாக இருந்தால் அந்த அரசியலமைப்பு 19ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்றதும் ஜனநாயக ரீதியானதாகவும் இருக்கவேண்டும்.

அதேபோன்று ஜனநாயக உரிமைகளை மேலும் உறுதிப்படுத்துவதும், சுயாதீன ஆணைக் குழுக்களை பலப்படுத்தக்கூடிய அரசியலமைப்பு திருத்தமாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயமாக அதற்கு ஆதரவை வழங்கும்.

மாறாக, 19ஆவது திருத்தத்துக்கு கிடைத்துள்ள வெற்றியில் பின்னடைவை ஏற்படுத்தும் வகையிலான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அதற்கு கடும் எதிர்ப்பை தெரிவிப்போம். அதற்கு இடமளிக்கவும் முடியாது.

அவ்வாறே, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் மக்களுக்குத் தேவையானதொன்றாகும். எதுஎவ்வாறாயினும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் திருத்தங்களோ அல்லது திட்டங்களோ அது எதுவாக இருந்தாலும் ஆதரவு வழங்கப்படவேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. மேலும், மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் விரைவில் நடத்தும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் நடத்துமாக இருந்தால், நாங்கள் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வோம் - என்று தெரிவித்தார்.

ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கவேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. ஆகவே, அரசாங்கம், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையிலான அரசியலமைப்புத் திருத்தங்களை கொண்டுவருமாக இருந்தால் அதற்கு ஆதரவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கிறது. மாறாக 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஜனநாயகத்தன்மையை பாதிக்கும் வகையில் புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்று நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

# 807 கிலோ மஞ்சள் தொகையுடன் 4 பேர் கைது



**சட்டவிரோதமாக இந்நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை உலர்ந்த மஞ்சளுடன் நான்கு பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

**மன்னார் வங்காலை மற்றும் நுரைச்சோலை தலுவ கடற்கரைகளின் ஊடாக சட்டவிரோதமாக குறித்த உலர்ந்த மஞ்சள் தொகையை நாட்டிற்கு கொண்டுவர முற்பட்டபோதே கடற்படையால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

**இதன்போது, சந்தேகநபர்களிடம் இருந்து 807 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

**கடற்படையால் குறித்த கடற்கரைகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது குறித்த மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.**

**இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 25 வயதுக்கும் 58 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

**இதன்போது பறிமுதல் செய்யப்பட்ட மஞ்சள் தொகை, இரண்டு டிங்கி படகுகள் மற்றும் சந்தேகநபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சின்னபாடு மற்றும் யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.**



**மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் ரனவீர சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு வழங்கி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ரனவீரவின் இடமாற்றத்தை முன்னிட்டு கௌரவிக்கும் நிகழ்வொன்றை கண்டி மக்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்தப் பிரியாவிடை வைபவம் மத்திய மாகாண பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது மக்கள், அவரின் சேவையை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர். கண்டி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி பஸ்லுர் ரஹ்மான் தலைமையில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை தேசிய தலைவர் சஹீத் எம்.ரிஸ்மி, கண்டி மஸ்ஜித் சம்மேளன தலைவர் கே.ஆர்.ஏ.சித்தீக், அகில இலங்கை மொத்த வியாபார சங்கத் தலைவர் டபிள்யூ.எம்.நாஜிம், கண்டி வர்த்தக சங்கப் பிரதிநிதி ஐ.அலிகான் மற்றும் கண்டி சிக்ஸ் வை தலைவர் ஏ.எஸ்.எம்.கஸ்ஸாலி ஆகியோர் கலந்து கொண்டதை இங்கு படத்தில் காணலாம்.**

**(படம்:- இக்பால் அலி)**

# கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்கு நடவடிக்கை

## இரண்டு மாதங்களில் நிறைவடையும் என்கிறார் தொழில் அமைச்சர்

தொழில் ஒப்பந்தம் காலாவதியாகியும் தொடர்ந்து கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் இந்த நடவடிக்கைகளை நிறைவுசெய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொரிய மனிதவள அபிவிருத்தி நிறுவகத்தில் இலங்கைக்கான கொரிய வதிவிட பிரதிநிதி கிம் வொன் ஷெங்சைவுக்கும் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரியாவுக்கு தொழிலுக்காக செல்லும் இலங்கையருக்கு விசேட தொழில் பயிற்சி நிலையம் அமைக்க இந்தக் கலந்துரையாடலின் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதனை 200 பேர் பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் ஹோமாகமவில் நிர்மாணிக்கவும் இந்தப் பயிற்சி நிலையத்திற்கு கொரியாவின் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



மேலும், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளதாவது:

தொழில் ஒப்பந்தம் காலாவதியான பின்னரும் கொரியாவில் தங்கியிருக்கும் ஆயிரத்து 500 இலங்கையர்கள் இரண்டு மாதங்களுக்குள் நாட்டுக்கு அழைத்துவரப்படுவார்கள். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கொரோனா தொற்று பரவல் காரணமாக விமானசேவைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இவர்கள் மாதக்கணக்கில் கொரியாவில் தங்கியிருக்கவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவர முடியாமல் இருப்பதால், தொழில்வாய்ப்புக்காக புதிதாக கொரியா செல்ல காத்திருப்பவர்களை தொழில்களுக்கு அனுப்பிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறு தொழிலுக்காக ஒப்பந்தம் நிறைவடைந்தும் தொடர்ந்து கொரியாவில் இருப்பவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கும், அவ்வாறு அழைத்துவருபவர்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பயிற்சி மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்களை அழைத்து வர விசேட விமானசேவைகள் பணியில் ஈடுபடுத்தவும் இந்த நடவடிக்கைகளை இரண்டு மாதங்களில் நிறைவுசெய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# எல்சைமரை கட்டுப்படுத்தும் நோக்கில் 21 நாள் நடைப்பயணம்

## எல்சைமர் அமைப்பு தீர்மானம்

இலங்கை எல்சைமர் அமைப்பின் ஏற்பாட்டில் எல்சைமர் நோயை கட்டுப்படுத்தும் நோக்கிலான நடைப்பயணம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

டிமென்சியா நோய் தொடர்பாக மக்களின் விழிப்புணர்வை அதிகரித்தல், இந்த நோய் தொடர்பில் மக்கள் மத்தியில் இருக்கும் நிலைப்பாட்டை மாற்றுதல் ஆகிய நோக்கில் வருடாந்த சர்வதேச வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இலங்கை எல்சைமர் நிறுவனம் 17 வருடங்களுக்கு முன்னர் முன்னெடுத்த நடைப்பயணத்தை போன்று கொவிட் - 19 நோய்த்தொற்றுடன் இம்முறை டிஜிட்டல் நடைப்பயணத்தை முன்னெடுக்க அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

## புதிய ஆட்சியில்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தேர்தலிலும் அத்துரலியே ரத்ன தேரரின் தலைமையிலான அபே ஜனபல பக்ஷய என்ற கட்சியின் பிரதான தேர்தல் பிரசாரமாக அமைந்ததும் முஸ்லிம் விரோத எதிர்ப்புப் பிரசாரமாகும்.

ஓகஸ்ட் 6ஆம் திகதி பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றவுடன் முதல் வேலையாக இந்நாட்டிலுள்ள மத்ரசாக்களை மூடுவோம், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையை ஒழிப்போம், இஸ்லாமிய ஷரீஆ சட்டதிட்டங்களை ஒழிப்போம், முஸ்லிம் வியாபாரத்தை முற்றாக ஆட்டங்காணச் செய்வோம் என்றெல்லாம் கடுமையான கோஷங்களை எழுப்பி தேர்தலில் சிங்கள தீவிரவாதத்தை தூண்டிவந்தனர். ஆனாலும் இந்தக் கட்சி இலங்கை முழுவதிலும் ஒட்டு மொத்தமாக 69 ஆயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டதை அவதானித்தபோது சிங்களப் பேரினவாதம் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பது வெளிப்படையாகியது.

இத்தகையவர்கள்தான் முஸ்லிம்களின் உரிமைகளை பறிப்பதற்கான திட்டங்களை கடந்த ஆட்சியில் அரசாங்கத்துக்கு மும்மொழிவுகளை செய்துவந்தனர். இதில் முன்னாள் நீதி அமைச்சராக இருந்த விஜேதாச ராஜபக்ஷ பின்னணியிலிருந்து வருகின்றார்.

இந்த ஆட்சியில் நீதி அமைச்சர் பதவியை சட்டத்தரணி அலி சப்ரிக்கு கொடுக்க வேண்டாம் என்றும் அவர் ஓர் அடிப்படைவாதி, இஸ்லாமிய பயங்கரவாதி என்றும் பிரசாரங்களை சமூக ஊடகங்கள் வாயிலாக பரப்பி அந்த அமைச்சை விஜேதாச ராஜபக்ஷவுக்கு வழங்கவேண்டும் என்றும் பிரசாரங்களை முடுக்கிவிட்டு சிங்கள எதிர்ப்பலையை தூண்டி வந்தமையையும் அமைச்சரவை நியமிக்கும் முன்னர் காணமுடிந்தது.

அதனால் இவ்வாறான பின்னணியில் அரசாங்கம் இந்நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு அநீதிகள், அச்சுறுத்தல்கள், ஓரங்கட்டல்கள் ஏற்பட இடமளிக்கக்கூடாது. முஸ்லிம் சமூகம் அனுபவித்துவரும் அரசியல், பொருளாதார, மத, கலாசார உரிமைகளை பாதுகாத்து உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தேவைப்படும்போது முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பாக அரசாங்கம் முஸ்லிம் சமூகம் சார்ந்த கல்விமான்கள் மற்றும் அவை தொடர்பாக விளக்கங்களை கொடுக்கவல்ல குழுக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவேண்டும்.

பயங்கரவாதம் வேறு. அதேநேரம், ஒரு நாட்டில் வாழும் ஓர் இனம் என்ற அடிப்படையில் ஒருசில குழுக்கள் அல்லது நபர்களின் செயற்பாடுகளுக்காக ஒட்டுமொத்த இனத்தையும் அல்லது அந்த இனம் சார்ந்த உரிமைகளை நசுக்க அல்லது மானசீக பாதிப்புகள் தொந்தரவுகளை மேற்கொள்வதானது அனைத்துலக மனித உரிமைகள் சாசனம் மற்றும் இந்நாட்டின் அரசியலமைப்புக்கும் ஏனைய சாசனங்களுக்கும் முரணானதாகும்.அவ்வாறே எல்லா மக்களுக்கும் பொதுவான அரசாங்கம் என்றவகையில் ஆட்சிக் கொள்கையும் தத்துவமும் என்றபோதும் பல்லின பன்முகத்தன்மைக்கு ஏற்றவிதமாகவும் எல்லா இனங்களையும் ஆதரித்து அரவணைத்துச் செல்வதாகவும் அமையவேண்டும். இந்நாடு ஓர் இனத்திற்கு மாத்திரம் சொந்தமானது என்ற தத்துவம் முற்றிலும் தவறானதாகும். அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட கண்டி மாநகரில் அன்றைய தினம் தொங்கவிடப்பட்டிருந்த தேசிய கொடிகளில் இந்நாட்டின் எல்லா இனங்களையும் பிரதிபலிக்கும் வர்ணங்களை காணமுடியாதபடி திரிபுபடுத்தப்பட்ட கொடிகளே பறக்கவிடப்பட்டிருந்தன. இது திட்டமிடப்பட்ட ஒரு குழுவின் செயலாகும். இவ்வாறான நடவடிக்கைகளை அரசாங்கம் கண்டும் காணாமலும் இருந்தால் அத்தகைய சக்திகள் பலமடைந்து நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச்செல்வதை தவிர்க்க முடியாது. அதனால் ஜனாதிபதியின் இன்றைய கொள்கைப் பிரகடனமும் ஆட்சிக் கொள்கையும் இந்நாட்டில் பௌத்த இனத்திற்கானதாக மாத்திரமன்றி ஏனைய தமிழ், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்கள் என்ற அடிப்படையில் பாரபட்சமற்றதாகவும் நீதியானதாகவும் நியாயமானதாகவும் அமையவேண்டும்.

# வீடொன்றுக்கு 12 இலட்சம் ரூபா செலவில் மீரியபெத்தையில் 132 தனிவீடுகள்: ஹல்துமுல்லை இடர் முகாமைத்துவப் பிரிவினர் நடவடிக்கை

மீரியபெத்தை மண்சரிவு பிரதேசத்துக்கு அண்மையில் வசித்துவரும் 132 குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கும் வகையிலான வேலைத்திட்டத்தை ஹல்துமுல்லை இடர் முகாமைத்துவப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



இப்புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணித்துண்டுகளும், அருகாமையிலுள்ள பெருந்தோட்டமொன்றிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய இடர் முகாமைத்துவப் பிரிவினரால் வீடொன்று 12 இலட்சம் ரூபா செலவில் 132 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

பதுளை மாவட்ட அரச அதிபர் தமயந்தி பரணகமயின் உத்தரவிற்கமைய ஹல்துமுல்லை பிரதேச செயலாளர் சுனேத் ஜினேந்திரசேனவின் வழிநடத்தலில் மேற்படி வீடமைப்புகள் இடம்பெறவுள்ளன.

மீறியபெத்த மண்சரிவு அனர்த்தம் 2014 நவம்பர் 29ஆம் திகதி இடம்பெற்றது. இச்சம்பவத்தில் 37 பேர் பலியாகியிருந்ததுடன், 75 குடியிருப்புகள் சேதமாகியிருந்தன. இவர்களுக்கான வீடமைப்புகள் நிறைவுபெற்று, அவ்வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அப்பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள மண்சரிவு அபாயப் பிரதேசத்தில் மேலும் 132 குடும்பத்தினர் வசித்துவருகின்றனர். இவர்கள் தமக்கான வீடுகளை அமைத்துத் தருமாறு கோரி பல்வேறு போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சதுப்பு நிலங்களுக்கு மண் நிரப்பப்படுவதால் உயிர் பல்வகைமைக்கு அச்சுறுத்தல்

## தேசிய வனப் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் அதீக் நசீர்

(கண்டி)

கடந்த காலங்களில் வயற்காணிகளும் சதுப்பு நிலங்களும் அதிகளவில் மண் நிரப்பப்பட்டு தரைக் காணியாக மாற்றப்பட்டதால் பாரியளவு சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டுவருவதுடன், உயிர் பல்வகைமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாகவும் தேசிய வனப் பாதுகாப்புச் சங்கம் தெரிவிக்கிறது.

தேசிய வனப் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் அதீக் நசீர் இது பற்றி கண்டியில் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் வயற்காணிகளும் சதுப்பு நிலங்களும் அதிகளவில் மண் நிரப்பப்பட்டு தரைக் காணியாக மாற்றப்பட்டதால் நத்தை, ஊர்ந்துசெல்லும் விலங்கினங்கள், சதுப்பு நில மீன் இனங்கள், வண்ணத்துப் பூச்சிகள்,கொக்கு இனங்கள், மீன்கொத்தி போன்ற சதுப்பு நிலங்கள் மற்றும் நீர் நிலைகளை அண்டி வாழும் விலங்கினங்கள் பாரியளவில் அருகி வருகின்றன.

அது மட்டுமல்லாது ஊற்றுநீர் மற்றும் நிலக்கீழ் நீர் வளம் என்பன பாதிப்படைவதாகவும், இதனால் தேசிய ரீதியில் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பிருப்பதுடன், சுற்றாடலில் வெப்ப அதிகரிப்பும் ஏற்படுகின்றது.

எனவே, சதுப்பு நிலங்கள் மற்றும் வயற்காணிகளை நிரப்பி தரைக்காணியாக மாற்றும் விடயத்தில் மிக அவதானமாக செயற்படவேண்டும் என்றும் குறிப்பிட்ட அவர், இது விடயமாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

# 3 வருடங்களாக மூடப்படாத 48 மாணிக்கக்கல் சுரங்கக் குழிகள்!

அரசாங்கத்தால் மாணிக்கக்கல் அகழ்வுக்கு இரண்டு வருட அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், மாணிக்கக்கல் சுரங்க குழிகள் இன்னும் மூடப்படாததால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரிதும் சிரமப்பட்டுள்ளனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையால் பொகவந்தலாவை சீனாகலை தோட்டத்தில் கால்நடைகளுக்கு புல் அறுக்கும் காணியிலேயே மாணிக்ககல் அகழ்வை மேற்கொள்ள கடந்த 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், ஒப்பந்த காலம் நிறைவடைந்து சுமார் மூன்று வருடங்கள் கடந்துள்ளபோதிலும் குழிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கால்நடை வளர்ப்பாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறித்த பகுதியில் மாத்திரம் 48 மாணிக்கக்கல் சுரங்கக் குழிகள் தோண்டப்பட்டுள்ளன. எனவே, அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




# நாவலப்பிட்டியில் கேரள கஞ்சாவுடன் நால்வர் கைது!

(க.கிஷாந்தன்)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலப்பிட்டி நகர பகுதியில் விற்பனைக்காக வைத்திருந்த ஒரு தொகை கேரள கஞ்சாவுடன் நான்கு பேர் நேற்று மாலை நாவலப்பிட்டி குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, சோதனை மேற்கொண்ட பொலிஸார் குறித்த நால்வரையும் கைதுசெய்துள்ளனர். அத்தோடு, இவர்களிடமிருந்து 34,500 ரூபா பணத்தொகையும் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் நீண்டகாலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இச்சந்தேக நபர்களை மேலதிக விசாரணையின் பின்னர் நாவலப்பிட்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சப்ரகமுவ மாகாண மகா சமன் தேவாலயத்தில் மகா பெரஹர

(இரத்தினபுரி)

சப்ரகமுவ மாகாண மகா சமன் தேவாலயத்தில் மகா பெரஹரவை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு குறித்த தேவாலயத்தில் விசேட பிரித் நிகழ்வொன்று இடம்பெற்றது.

குறிப்பிடத்தக்கது.

மேற்படி தேவாலயத்தில் இடம்பெற்ற பிரித் நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்சனி ஜயகொடி,



மேற்படி தேவாலயத்தின் பெரஹர நிகழ்வு இன்றுமுதல் ஆரம்பமாவதுடன், சுகாதார விதிமுறைகளுக்கமைய பெரஹரவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம, ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுலா இதிகாவெல உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஓடும் பஸ்ஸில் பயணி திடீர் மரணம்: பயணப் பையிலிருந்து ஒரு கிலோ கஞ்சா மீட்பு

(பலாங்கொடை)

பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்தபோது பயணியொருவர் திடீரென மரணித்தார். மரணித்தவரின் பயணப் பையிலிருந்து ஒரு கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

பலாங்கொடை வெலிஓயாவிலிருந்து தனமல்வில வரையில் பயணித்த பஸ்ஸிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பயணி மரணித்த சம்பவம் குறித்துக் பஸ் சாரதிக்கு அறிவித்தையடுத்து பயணியை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். அங்கு அவர் யாரென்ற விபரங்களை அறிய அங்கு அவரது கைப்பையை பரீட்சித்துப் பார்த்ததில் அதில் ஒரு கிலோ கஞ்சா பொலிஸார் மற்றும் தனமல்வில வைத்தியசாலை ஊழியர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மரணித்தமைக்கான காரணத்தைக் கண்டறிய பிரேத பரிசோதனைகளை தனமல்வில வைத்திய அதிகாரிகள் மேற்கொண்டுவருவதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பியகம பழக்கடை வியாபாரியின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது!

(பியகம)

மர்மமான முறையில் கடந்த 10ஆம் திகதி கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட பியகம சியம் பலாபே சந்தி விகாரைக்கு முன்னால் பழக் கடையொன்றை நடத்திச்சென்ற பழ வியாபாரியின் கொலையோடு நேரடியாக சம்பந்தப்பட்ட குறித்த கடையின் உதவியாளரும் (வயது 19) அவரது சகாவும் (வயது 24)பியகம பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



கடை உதவியாளர் கெக்கிராவ பிரதேசத்தில் தனது மாமாவின் வீட்டில் தலைமறைவாகியிருந்ததுடன், அவரது சகா கண்டி பிரதேசத்தில் பிக்குமாரகள் தங்கும் ஆரண்யவில் தலைமறைவாகியிருந்த நிலையிலும் கைதுசெய்யப்பட்டனர்.

கொலையாளிகள் இருவரும் கண்டி தலாதுஓய கபுலியெத்த பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமாகாத இளைஞர்களாவர். கொலைசெய்யப்பட்டவர் எஹெலியகொடை கொடகம்பல பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமாகாத ஆர்.பீ.மெரில் பத்மகுமார (வயது 32) என்பவராவர்.

பழவியாபாரியின் வங்கிக்கணக்கில் வைப்புச்செய்யப்பட்டிருந்த பணத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே கொலையை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணைமூலம் தெரியவந்துள்ளது.

பியகம பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி தனன்ஜய ராஜபக்ஷவால் கொலைசெய்யப்பட்ட பழவியாபாரியின் வங்கிக்கணக்கு சோதனையிடப்பட்டதுடன், கொலைச் சம்பவத்தையடுத்து பழவியாபாரியின் ஏ.டீ.எம். அட்டையை உபயோகித்து பணம் பெற்றுள்ள தம்புள்ள மற்றும் கெக்கிராவ நகரங்களிலுள்ள ஏ.டீ.எம். நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.டி.வி. கெமராவில் பதிவாகியுள்ள காட்சிகளை கண்காணித்தே இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பழக்கடையின் குறித்த உதவியாளர் அங்கு பழவியாபாரியின் வங்கிக் கணக்குப் புத்தகத்தைக் கண்டு, வங்கிப் புத்தகத்தில் வைப்பிலுள்ள 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவை 37 இலட்சம் ரூபா என தவறாக புரிந்துகொண்டு தனது சகாவுக்கு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

பின்னர் கடை உதவியாளரும் சகாவும் இணைந்து பழ வியாபாரியை கொலைசெய்ய திட்டமிட்டு அதற்கிணங்க கடந்த 10ஆம் திகதி இரவு பழவியாபாரியை கொலை செய்து கடைக்குப் பின்னாலுள்ள அடர்ந்த காட்டுப்பகுதியில் புதைத்துவிட்டு, வியாபாரியின் ஏ.ரி.எம். வங்கி அட்டையையும் கைத்தொலைபேசியையும் எடுத்து தப்பிச்சென்றுள்ளனர்.

கடை உதவியாளர் கணக்கு வைப்பிலிருந்து நான்கு சந்தர்ப்பங்களில் மொத்தமாக ஒரு இலட்சத்து 12 ஆயிரம் ரூபாவை பெற்றுள்ளதுடன், அதில் தனது சகாவுக்கு 35 ஆயிரம் ரூபாவை கொடுத்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இருவரிடமிருந்தும் ஏ.ரி.எம். வங்கி அட்டையும், பணம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுகளும் மற்றும் பழக்கடை வியாபாரியின் கைத்தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளன.

# போலி ஆவணப்பத்திரங்களுடன் கைப்பற்றப்பட்ட மூன்று வாகனங்கள்

(பலாங்கொடை)

பலாங்கொடை பின்னவல பொலிஸாரினால் நேற்று முன்தினம் போலி இலக்கத் தகடுகள் மற்றும் போலி ஆவணப்பத்திரங்களுடன் மூன்று வாகனங்கள் ரத்மலவின்ன பிரதேசத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.



கார், லொறி மற்றும் ஜீப் போன்ற மூன்று வாகனங்களையே இவ்வாறு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். காரொன்றின் ஆவணப் பத்திரத்தை ஜீப்க்கு மாற்றி அமைத்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு போலியான ஆவணப்பத்திரங்கள் மற்றும் போலியான இலக்கத் தகடுகள் தயார் செய்து வாகனங்களை விற்பனைசெய்தவர்கள் யாரென இதுவரையில் கண்டுபிடிக்கப்படாத நிலையில், பின்னவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பலாங்கொடை- இம்புல்பேயில் பாவனையற்றுக் கிடக்கும் மட்பாண்ட தொழிற்சாலையை திறக்குமாறு மக்கள் கோரிக்கை

(பலாங்கொடை)

பல வருடங்களாக மூடப்பட்டு காணப்படும் பலாங்கொடை, இம்புல்பே போக்குனேகம மட்பாண்ட தொழிற்சாலை மற்றும் விற்பனை நிலையத்தை மறுபடியும் திறந்து தருமாறு புதிய அரசாங்கத்திடம் அப்பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

எடுப்பதற்கு இடம் இல்லாததால்தான் நாங்கள் இந்தத் தொழிற்சாலையின் வேலைகளை நிறுத்தி வைத்திருக்கின்றோம்.

இப்போதைக்கு களிமண் எடுப்பதற்கு சமனலவேவ நீர்த்தேக்கத்தின் அருகில் களிமண் இருக்கின்றது. அதை எடுப்பதற்கு அரசாங்கம் இடமளித்தால் மட்பாண்ட தொழிற்சாலையை



பல வருடங்களாக இந்த மட்பாண்ட தொழிற்சாலையில் மட்பாண்டங்கள் உட்பட பல ஆடம்பரமான தயாரிப்புகள் தயாரிக்கப்பட்டு அதனை விற்பனை செய்து வந்ததனால் இப்பிரதேசத்தில் பல பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்ததாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், இத்தொழிற்சாலை மூடப்பட்டு காணப்படுவதால் பலர் வேலைவாய்ப்பின்றி காணப்படுகின்றனர்.

இது தொடர்பாக இம்புல்பே பிரதேச சபை தலைவர் ப்ரீலால் செனரத்திடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது;

மட்பாண்டங்கள் தயாரிப்பதற்கு களிமண் மறுபடியும் திறப்பதற்கு வாய்ப்புள்ளதாக அவர் கூறினார். மேலும், இந்த தொழிற்சாலையை மறுபடியும் திறப்பதால் பல பேருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதாகவும் பிரதேச சபை தலைவர் மேலும் தெரிவித்தார்.

எனவே, புதிய அரசாங்கத்தின் பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர இது தொடர்பாக கவனத்தை செலுத்தி, இந்த தொழிற்சாலையை மறுபடியும் திறந்து தொழில் வாய்ப்புகளுக்கு வழியேற்படுத்துமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பதுளையில் மூன்று கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளை

(பதுளை)

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுளை - பசறை வீதியின் இரண்டாம் மைல் பிரதேசத்தில் மூன்று வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளன.





கடந்த 17ஆம் திகதி இரவு இடம்பெற்ற இக்கொள்ளைச் சம்பவத்தில் கொமினிகேஷன், பசைகளுக்கு கடை மற்றும் ஹாட்வெயார் உட்பட மூன்று பிரதான கடைகளின் பூட்டு உடைக்கப்பட்டு இனந்தெரியாத நபர்களினால் பணம் மற்றும் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் யாரும் கைதுசெய்யப்படாத நிலையில், மோப்பநாயின் உதவியுடன் பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் பதுளை நகரின் பல பகுதிகளில் ஆங்காங்கே பொலிஸாரால் சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போலி மாணிக்கக்கற்களை விற்பனைசெய்தவர் கைது!

(மஸ்கெலியா)

போலி மாணிக்கக்கற்களை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவரை மஸ்கெலியா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி மஸ்கெலியா ராணிதோட்ட பகுதியிலுள்ள ஒருவருக்கு போலி மாணிக்கக்கற்களை ஒரு இலட்சத்து 98 ஆயிரத்துக்கு விற்பனை செய்ததாக அந்த கற்களை வாங்கியவர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததைத் தொடர்ந்து, சந்தேகநபரை கடந்த 17ஆம் திகதி மாலை குடா மஸ்கெலியா பகுதியில் வைத்து மஸ்கெலியா பொலிஸார் செய்துள்ளனர்.

கைதுசெய்த வேளையில் மேலும் 2 இலட்சம் ரூபாவுக்கு போலியான மாணிக்கக் கற்கள் விற்பனைசெய்ய முற்பட்டபோது இவர் கைதுசெய்யப்பட்டதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார். சந்தேகநபரை ஹட்டன் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

முதற்கட்டமாக பயணிகளுக்கு சிறந்த மன நிலையுடன் பஸ்ஸில் அல்லது புகையிரதத்தில் பயணம் செய்வதற்கான சூழலை ஏற்படுத்தி போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் பணியை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

மிகச் சிறியதோர் ஆரம்பத்திலிருந்து பெரிய மாற்றத்தை செய்யமுடியும். பஸ்களை கழுவி சுத்தம்செய்து பிரயாணிகளுக்கு பயணிப்பதற்கான ஒழுங்குகளை உடனடியாக ஆரம்பியுங்கள் என ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

சுவரொட்டிகளை ஒட்டுவதை நிறுத்துவதற்கு மேற்கொண்ட சிறியதொரு தீர்மானம் நாட்டின் அனைத்து நகரங்களையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு வழிவகுத்திருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைத்துத் துறைகளினதும் ஒரு சேவையாக நடத்திச்சென்றாலும் நட்டம் அடையாத நிறுவனமாக இருக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். கிராமிய பிரதேசங்களில் பஸ் போக்குவரத்து தொடர்பாக அரச மற்றும் தனியார்துறைகள் கவனம் செலுத்தவேண்டுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புகையிரதங்கள் மற்றும் பஸ்கள் இணைந்த சேவையையும் பஸ்கள் இணைந்த பயண நேரசூசியையும் உடனடியாக ஆரம்பியுங்கள். போக்குவரத்துத்துறையை மேம்படுத்துவதற்காக முதலில் தீர்வுகளை வழங்கக்கூடிய துறைகளை இனங்காண்பது அவசியமாகும். எதிர்வரும் ஐந்து வருடங்களில் போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கு குறுகிய கால மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். குறித்த இலக்கு அடையப் பெறுகின்றதா என்பது குறித்து ஆராய்வது



# போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் பணியை பஸ் வண்டியை கழுவுமிடத்திலிருந்து ஆரம்பியுங்கள்!

## போக்குவரத்து அதிகாரிகளிடம் ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

- ★ பயணிகள் போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கு குறுகியகால நீண்டகால திட்டம்...
- ★ புகையிரதம் - பஸ்கள் இணைந்த சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை...
- ★ இணைந்த போக்குவரத்து நேரசூசியை நடைமுறைப்படுத்துமாறும் பணிப்பு...
- ★ முன் கட்டணம் செலுத்தப்பட்ட அட்டை முறைமை விரைவில்...
- ★ அதிவேக வீதிகளில் பயணிகள் போக்குவரத்துக்கு பொதுப் போக்குவரத்து பஸ்கள்...

அபிவிருத்தியை மிகச் சிறிய இடத்திலிருந்து ஆரம்பிக்க முடியுமென குறிப்பிட்டார்.

போக்குவரத்து அமைச்சு மற்றும் வாகனங்களை ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டம் குறித்து நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மோட்டார் கார்களில் வந்து அதனை நிறுத்திவிட்டு பஸ்களில் பணி இடங்களுக்குச் செல்லும் முறைமையை (Park & drive) விரைவாக நடைமுறைப்படுத்தி வீதி நெரிசலை தீர்க்கவேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். போக்குவரத்து சபை பஸ் போக்குவரத்துச் சேவையை



மிகவும் முக்கியமானதாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.



பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கக்கூடிய வகையில் புகையிரத



பெட்டிகளை புதுப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. கொழும்பு கோட்டை மற்றும் மேலும் நான்கு புகையிரத நிலையங்களை மாதிரி நிலையங்களாக விரைவில் புதுப்பிப்பதாக போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

புகையிரத எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அதிகளவானோருக்கு புகையிரதத்தில் பயணம் செய்ய முடியுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பயிற்சி மற்றும் பராமரிப்பு நிறுவனங்களின் சேவையை தனியார்துறைக்கும் வழங்குவதன் மூலம் இலாபமீட்டக்கூடிய வழிவகைகள் குறித்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இங்கு சுட்டிக்காட்டினார்.

வினைத்திறனான பயணிகள் போக்குவரத்து சேவைக்கு அரச மற்றும் தனியார்துறைகள் முற்கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட அட்டைமுறைமையை விரைவாக அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தை ஊழல், மோசடிகள் இல்லாத நிறுவனமாக மாற்றுவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நல்ல நிலையிலுள்ள பொதுப் போக்குவரத்து பஸ்களை அதிவேக பாதைகளில் பயணம் செய்வதற்கு அனுமதிப்பதன் மூலம் குறைந்த தொகையில் அதிகளவான பயணிகளுக்கு பயண வசதிகளை வழங்கக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் என்.டி.மொன்டி ரணதுங்க ஆகியோரும் போக்குவரத்து அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள், தனியார் பஸ் சங்கப் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது- கப்ரால் தகவல்

புதிய வரவு- செலவுத் திட்டத்தை தயாரிக்கும் பணியை அரசாங்கம் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இலங்கை ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் புதிய வரவு-செலவுத் திட்டம் உருவாக்கப்படுமென நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது;

புதிய நடைமுறைகள் மற்றும் வழக்கமான நடைமுறைக்கேற்ப வரைபு செய்யப்பட்டு புதிய வரவு-செலவுத்திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

அதாவது, முதல் கட்டமாக நிதி அமைச்சு புதிய வரவு-செலவுத்திட்டம் குறித்த சுற்றறிக்கையை வெளியிடும். மேலும், அவற்றின் கீழ் செயற்படும் துறைகள் மற்றும் முகவர் நிறுவனங்களின் உதவியுடன் அமைச்சுகள் வருவாய் மற்றும் செலவின மதிப்பீடுகளைத் தயாரிக்கும்.

அந்தவகையில், நிதி ஆணையகம், அதன் அரசியலமைப்பு ஆணைப்படி மாகாண சபைகளுக்கு ஒதுக்கீடுசெய்ய பரிந்துரைத்து, அவற்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும்.

அதனைத் தொடர்ந்து மதிப்பீடுகள் அரசாங்கத்தின் கொள்கை மற்றும் முன்னுரிமைகளுக்கு இணங்குவதற்காக நிதி அமைச்சும் ஏனைய அமைச்சுகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி, பின்னர் ஆய்வு மற்றும் ஒப்புதலுக்காக அமைச்சரவையில் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கும்.

இறுதி மதிப்பீடுகள் அரசாங்க வரவு-செலவுத் திட்டத்திற்கான உபரி அல்லது பற்றாக்குறையை வெளிப்படுத்தும் இந்த மதிப்பீடுகள் நிதி அமைச்சரால் வரவு-செலவுத் திட்டத்தின் முதல் வாசிப்பான ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த வருடத்தில் ஒக்டோபர் மாத தொடக்கத்தில் ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நிதி அமைச்சர் முன்வைத்து, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும், அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்பது பொது நடைமுறை என தெரிவித்துள்ளார்.



9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் கலந்துகொள்வதற்காக மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நேற்று அழைத்து அழைத்துவரப்பட்டார்.



வெளிநாட்டு உறவு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய நேற்று, அமைச்சு கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டபோது......

# இந்தியாவே சஹ்ரானுக்கு பாதுகாப்பு புகலிடமாக இருந்தது

## - தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன தகவல்

இந்தியா தேசிய தௌஹித் ஜமாஅத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாசிம் உள்ளிட்ட அவரது சகாக்களுக்கு பாதுகாப்பான புகலிடமாக இருந்தது - என தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் வாக்குமூலம் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சஹ்ரானும் அவரது சகாக்களும் பலமுறை இந்தியாவுக்குச் சென்றிருந்தனர். தாக்குதல்களுக்கு முன்னர் அங்கேயே தங்கியிருந்தனர்.

எனினும், ஏப்ரல் நான்காம் திகதி வெளிநாட்டு புலனாய்வு அமைப்பொன்று தெரிவித்த தகவலில் சஹ்ரான் குழுவினர் தாக்குதலுக்கு தயாராகியுள்ளனர் என தெரிவிக்கப்படவில்லை.

மேலும் சஹ்ரானின் குழுவினரால் ஆயுதங்கள் சேகரிப்பது குறித்து தகவல் பெறவில்லை. நுவரெலியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் முஸ்லிம்களின் ஒரு குழுவுக்கு சஹ்ரான் ஆயுதப் பயிற்சி அளித்ததாக தகவல் கிடைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொரோனாவால் முட்டை உற்பத்தி வீழ்ச்சி



(இக்பால் அலி)

'கொவிட் - 19' நோய்த்தொற்றினால் முட்டை உற்பத்தி வீழ்ச்சியை சந்தித்துள்ளதாகவும் ஒரு நாளைக்கு 80 இலட்சத்திலிருந்து 90 இலட்சம் வரையிலான முட்டைகள் நுகர்வோரின் பயன்பாட்டுக்காக விநியோகிக்கப்படுவதாகவும் கால்நடை வளங்கள் பண்ணை மேம்பாடு பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார்.

வாரியப்பொலவில் இடம்பெற்ற அமைச்சர் கடமையைப் பொறுப்பேற்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது;

ஒரு நாளைக்கு 80 இலட்சத்திலிருந்து 90 இலட்சம் வரையிலான முட்டைகள் நுகர்வோர் பயன்பாட்டுக்காக விநியோகிக்கப்படுகின்றன. கொவிட் -19 தொற்றின் தாக்கம் அதிகரித்திருந்த காலப்பகுதியில் முட்டை உற்பத்தியாளர்கள் பாரிய பிரச்சினையை எதிர்நோக்கியிருந்தார்கள். அதன்காரணமாக முட்டை உற்பத்தி வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

'கொவிட்-19' கொரோனா தொற்றுக் காலத்தில் கோழித் தீன் பிரச்சினை இருந்தது. மறுபக்கத்தில் முட்டை உற்பத்திசெய்யும் கோழிப் பண்ணையாளர்கள் உற்பத்திசெய்யும் முறையில் அறிந்துகொண்ட மாற்று வேலைத் திட்டம் தான் சோளத்திற்குப் பதிலாக கோதுமை வழங்கியமையாகும். ஆனால், மக்கள் அந்த வேலைத்திட்டத்திற்கு நன்கு பரீச்சயமானவர்கள் அல்ல.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் சோளப் பயிர்ச்செய்கை பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இதனால், சோளச் பயிர்ச்செய்கையில ஈடுபட்ட விவசாயிகள் பெரும் நட்டத்தை சந்தித்துள்ளனர். ஜனாதிபதியின் வழிகாட்டல்களுடன் சோளப் பயிர்ச்செய்கை மீண்டும் சிறந்த முறையில் பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பப்படும், அதேபோன்று, கோதுமை உற்பத்திகளை இலங்கையிலும் மேற்கொள்ள முடியும் என்றார்.

## இன்றைய ராசி பலன்கள்

20.08.2020 (வியாழக்கிழமை)

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்
சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

| | | |
|---|---|---|
| மேஷம் | - | பக்தி |
| ரிஷபம் | - | பொறாமை |
| மிதுனம் | - | புகழ் |
| கடகம் | - | கடன் |
| சிம்மம் | - | தாமதம் |
| கன்னி | - | உற்சாகம் |
| துலாம் | - | சிக்கல் |
| விருச்சிகம் | - | சுகம் |
| தனுசு | - | தெளிவு |
| மகரம் | - | பாசம் |
| கும்பம் | - | விருத்தி |
| மீனம் | - | அன்பு |

**சுப நேரம்**
காலை: 07.35 -09.05
காலை: 03.30 - 05.45

**இராகு காலம்**
01.35
03.05

**எம கண்டம்**
06.05
07.35

# சம்பிக்க ரணவக்கவுக்கு முன்பிணை

## ஓகஸ்ட் 28ஆம் திகதி முன்னிலையாகுமாறு மேல் நீதிமன்றம் உத்தரவு

வாகன விபத்து சம்பவமொன்று தொடர்பாக முன்னாள் அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க மீது முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டு மீதான வழக்கு தொடர்பில் அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் முன்பிணை வழங்கியுள்ளதோடு, எதிர்வரும் 28ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க உத்தரவிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவருக்கு காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டுக்காகவே சம்பிக்க ரணவக்க மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்து தொடர்பில் சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், அந்த வழக்கு இன்று பரிசீலிக்கப்படவிருந்தது.



எனினும், இன்று இடம்பெறும் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு காரணமாக சம்பிக்க ரணவக்க நேற்று சீராய்வு மனுவொன்றை தாக்கல்செய்து நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். இந்நிலையிலேயே இவ்வாறு முன்பிணை வழங்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பிரதிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது!

பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த பிரதிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர், போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு உதவிசெய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து, போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் ஈடுபட்டுள்ளதோடு, அவர்களுடன் இணைந்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பேருவளை பிரதேச சபை உறுப்பினர் தாக்கப்பட்டமை கவலையளிக்கின்றது

## - மாநகர சபை உறுப்பினர் முபீத்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பேருவளை அமைப்பாளரும், பேருவளை பிரதேச சபை உறுப்பினருமான ஹஷீப் மரைக்கார் தாக்கப்பட்டமை மிகவும் மனவேதனையளிக்கிறது - என்று கல்முனை மாநகர சபை உறுப்பினர் சீ.எம்.முபீத் தெரிவித்தார்.



இது விடயமாக நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வாரம் தர்கா நகர் அதிகாரி கொட பகுதியில் நிலவிய முறுகல் நிலையை அவதானித்து அந்த விடயத்தை சுமுகமாக தீர்த்துவைக்க ஸ்தலத்துக்குச் சென்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பேருவளை அமைப்பாளரும் பேருவளை பிரதேச சபை உறுப்பினருமான ஹஷீப் மரைக்கார் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளமையை ஜனநாயக ரீதியாக நோக்கும்போது இது போன்ற நடவடிக்கைகள் சிறுபான்மை மக்களுக்கு பாரிய சவாலாக எதிர்காலத்தில் அமையும்.

இரு முகங்களுக்கிடையிலான பொதுவான பிரச்சினைகளை மக்கள் பிரதிநிதிகளோடு கலந்து பேசுவதற்குப் பதிலாக அடாவடித்தனங்களை அரங்கேற்றி அச்ச சூழ்நிலையை உருவாக்கினால் ஏற்கனவே அச்சப்பட்டிருக்கும் சிறுபான்மைச் சமூகங்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் மத்தியிலுள்ள சந்தேகம் வலுவடையும். இது விடயமாக அரசாங்கத்தினால் பக்கச்சார்பற்ற முறையில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

மக்கள் பிரதிநிதிகளே இவ்வாறு நடத்தப்பட்டால், சாதாரண மக்களின் நிலை என்ன என்பதுபோன்று, பாரிய அச்ச நிலையை இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுத்துகின்றன.

அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் ஜனநாயக அடிப்படையில் மக்கள் வழிநடத்தப்படவேண்டும். குற்றத்தை யார் செய்திருந்தாலும் அவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

அத்துடன், குறித்த பிரதேசத்தில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் தொடர்ந்தும் அரசாங்கம் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# மட்டு. காத்தான்குடி பொலிஸ் பிரிவில் இரு வீடுகள் தீப்பற்றி முற்றாக நாசம்

## - மற்றொரு வீடு தாக்கப்பட்டு முழுமையாக சேதம்







காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குடா பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் ஏற்பட்ட தீவிபத்து காரணமாக இரு வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

நாவற்குடா இசை நடனக் கல்லூரி வீதியில் 11ஆம் குறுக்கிலுள்ள இவ்வீடுகளில் தீப்பற்றியதில் வீட்டுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

குறித்த இரு வீடுகளில் பரவிய தீயை மட்டக்களப்பு தீயணைப்புப் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதேவேளை, குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள மற்றொரு வீடொன்று இனந்தெரியாத நபர்களால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. இதனால் வீடு முழுமையாக சேதமாகியுள்ளது. இதுவிடயமாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



தேசிய கல்வி ஆணைக்குழுவின் கௌரவ உறுப்பினராக சாய்ந்தமருதைச் சேர்ந்த சபீனா இம்தியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். சாய்ந்தமருதைச் சேர்ந்த கலாநிதி சபீனா இம்தியாஸ், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பிரயோக விஞ்ஞானபீட பீடாதிபதியுமாவார். (சாய்ந்தமருது)

# தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு ஞாயிறன்று சாய்ந்தமருதில் இடம்பெறும்

(சாய்ந்தமருது)

இலங்கை கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பிரதான வீதியில் வாசிகசாலை முன்பாக அமைந்துள்ள அகடமி 'என்' (N) இல் இடம்பெறவுள்ளது.

இதற்கு வளவாளராக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கவுன்ஸிலர் அஸ்ரக் இஸ்மாயீல் கலந்துகொள்ளவுள்ளார்.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள இளைஞர்கள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் தம்மை பதிவுசெய்து கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் தானிஸ் றஹ்மதுள்ளாஹ் தெரிவித்துள்ளார்.




# கொம்புச் சந்திப்பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி விரதம் சனியன்று அனுஷ்டிப்பு

(தேற்றாத்தீவு)

உலகளாவிய ரீதியில் இந்துக்கள் ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி விரதத்தை எதிர்வரும் சனிக்கிழமை அனுஷ்டிக்கவுள்ளனர். அந்த வகையில் இலங்கையின் மிக உயரமான சுதைவிக்கிர விநாயகரை இராஜகோபுரமாக கொண்ட மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையர் பேராலயத்தில் விநாயகர் சதுர்த்தி விரதத்தன்று காலை பத்து மணியளவில் ஆலயத்தில் மஹா கணபதி ஹோமம் வெகுசிறப்பாக இடம் பெறும். இதன்போது விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களுக்கு விரதத்துக்கான சங்கர்ப்பம் இடம்பெறும்.



அன்றைய தினம் இரவு ஆலயத்தில் வசந்த மண்டப பூஜை மற்றும் சுவாமி உள்வீதி, வெளிவீதி மற்றும் முத்து சப்பரத்தில் ஊர்வலம் வருகையும் இடம்பெறுவதுடன், மறுநாள் காலை ஆறு மணியளவில் இந்து சமுத்திரத்தில் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். அத்துடன், களிமண்ணால் செய்யப்பட்டு பூஜிக்கப்பட்ட விநாயகர் சிலை இதன்போது கரைக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து விரதம் அனுஷ்டித்த அடியார்களுக்கு விரத பாராயணம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன .

# உணவு பாதுகாப்பு தொடர்பிலான செயலமர்வு

(கல்குடா)

உணவு வகைகளை கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான உணவு பாதுகாப்பு சம்பந்தமான செயலமர்வு, வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.





இச்செயலமர்வில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளைச் சேர்ந்த உணவு வகைகளை கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

உணவு மருந்து பரி சோதகர்களான ரி.வரதன், என்.தேவநேசன், என்.விமலசேகரன் ஆகியோர் வளவாளர்களாகவும், பொதுச்சுகாதார பரிசோதகர்களான எம்.எஸ்.நௌபர், ஜே.யசோதரன், ஏ.எல்.எம்.நஸிர், என்.எம்.சியான் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தாக்கத்தின் பின்னர் மக்கள் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படும் நிலையிலும், மக்கள் உணவகங்களுக்கு அதிகம் செல்லும் நிலையிலும் மக்களின் பாதுகாப்புக் கருதி உணவு வகைகளை கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான உணவு பாதுகாப்பு தொடர்பில் இச்செயலமர்வில் விளக்கமளிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி பேராலய கொடியேற்றம்

வரலாற்றுச் சிறப்புபெற்ற மட்டக்களப்பு சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி பேராலய கொடியேற்ற மகோற்சவ பெருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உற்சவகால தலைமை குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.



ஆலயத்தில் கும்ப யாக பூஜை இடம்பெற்று விநாயகர் மற்றும் முருகப்பெருமானுக்கும் விசேட அபிஷேகம் நடைபெற்றது.

அதன்பின்னர் திரைச்சீலை ஆலயத்தின் வன்னிமை தலைமையில் ஆலயத்தின் உள்வீதி வலம் வந்ததும் சுபவேளையில் கொடியேற்றம் இடம்பெற்றது.

நடைபெற்ற கொடியேற்ற திருவிழாவுக்கு ஆலயத்தின் வன்னிமை மற்றும் வண்ணக்குமார் உற்சவகாரர்கள் உட்பட பக்தர்கள் அனைவரும் சுகாதார நடைமுறையைக் கடைப்பிடித்து ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செப்டெம்பர் 2ஆம் திகதி உதயமூலையில் அமைந்துள்ள பிரணவ தீர்த்த உற்சவத்துடன் ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா நிறைவடைய உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் மகோற்சவ திருவிழா ஆரம்பமாகியுள்ள நிலையில், நாட்டில் ஏற்பட்டிருக்கும் வைரஸ் நோய் தாக்கம் காரணமாக உற்சவ காலங்களில் இடம்பெறும் அன்னதான சேவை, சமூக இடைவெளியை கடைப்பிடித்து வழிபாடுகளில் ஈடுபடல், ஆலய வழிபாட்டுக்காக வருகின்ற பக்தர்கள் ஆலயத்துக்குள் குறுகிய நேரத்தை வழிபாட்டுக்காக ஒதுக்கிக்கொள்ளல் போன்ற பல்வேறுபட்ட விடயதானங்களை கவனத்தில் கொண்டு நடத்திக் கொள்ளுமாறு ஆலய வன்னிமை மற்றும் வண்ணக்குமார் சார்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

# தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியினால் சிரமதானம் முன்னெடுப்பு

(பாண்டிருப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.சுதாகரன் தலைமையில் ஓந்தாட்சிமடம் தொடக்கம் பெரியகல்லாறு வரையிலான கடற்கரைப் பிரதேசம் சிரமதானம் மூலம் துப்பரவுசெய்யப்பட்டது.



தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் என அழைக்கப்படும் பிள்ளையானின் 45ஆவது பிறந்த தினத்தையிட்டு கட்சி ஆதரவாளர்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு சமூகப் பணிகள் நடைபெற்றன.

இதற்கமைய கடற்கரைப் பிரதேசங்கள் சிரமதானம் மூலம் தூய்மைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் மண்முனை தென்எருவில் பற்றிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் சேனாதிராஜா, அமைப்பாளர்கள், வட்டாரப் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இங்கு ஓந்தாட்சிமடம் தொடக்கம் பெரிய கல்லாறு வரையிலான கடற்கரைப் பிரதேசத்தில் கரை ஒதுங்கிக்கிடந்த பிளாஸ்ரிக் கழிவுகள் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள், பொலித்தீன் பைகள் ஆகியன சிரமதானம் மூலம் அகற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# காவத்தமுனை அல்–அமீன் வித்தியாலயத்தில் சிரமதானப் பணிகள் நடைபெற்றன

(ஓட்டமாவடி )

ஓட்டமாவடி கோட்டத்துக்குட்பட்ட காவத்தமுனை அல்-அமீன் வித்தியாலயத்தில் சிரமதானப் பணிகள் அண்மையில் அதிபர் ஏ.ஜீ.பிர்தவ்ஸ் தலைமையில் நடைபெற்றன.

அமைவாகவும், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஆலோசனைக்கு அமைவாகவும் இந்த சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அனைத்து ஆசிரியர்களின் பங்களிப்பில்





105 நாட்கள் பாடசாலை விடுமுறையின் பின்னர் பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு அரசு விடுத்த உத்தரவின் பிரகாரம் முழுமையாக தற்போது அனைத்து மாணவர்களையும் உள்ளீர்ப்பு செய்யும் நோக்கில் வலயக் கல்வி அலுவலகத்தின் வழிகாட்டலுக்கு

பிரதேச சமுர்த்தி உதவிபெறும் பயனாளிகளின் ஒத்துழைப்புடன் இந்த சிரமதானப் பணிகள் நடைபெற்றதுடன், சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களின் ஆர்வத்தையிட்டு பிரதேச சபை உறுப்பினர் ஜெஸீமா பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.











திருகோணமலை ஹீரோ லியோ கழகத்தினால் பாடசாலைகளுக்கு கொவிட் - 19 உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய, திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு 200 முகக்கவசங்களும் தொற்று நீக்கும் பொருட்களும் கடந்த திங்களன்று வழங்கப்பட்டது. ஹீரோ லியோ கழகத்தின் வலய தலைவர் சுதன் ரெட்ணகுமார், ஹீரோ லியோ கழகத்தின் தலைவர் வசீகரன் ஆகியோர் கழக உறுப்பினர்களுடன் இணைந்து இந்த உபகரணங்களை வழங்கினர். (படங்கள் : திருகோணமலை )

# மட்டக்களப்பில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்கும் சமூக சேவைகள் அணி விஸ்தரிப்பு

## மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் தீர்மானம்

(மட்டக்களப்பு)

யுனிசெப் மற்றும் சர்வோதயம் ஆகிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மட்டக்களப்பில் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 8 கிராமசேவகர் பிரிவுகளைத் தெரிவுசெய்து இப்பகுதிகளில் தொடர்ச்சியாக ஆறு மாத காலத்திற்கு கிராம மட்டத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் பாதிப்புகளுக்கு நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சமூக சேவைகள் பணி அணியினரின் நோக்கு நிலை தொடர்பான விசேட கலந்துரையாடலில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக தெரியவருவதாவது;

மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பெண்கள் வலுவூட்டல் உத்தியோகத்தர்கள், உளவளத்துனை உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் 30 பேர் கொண்டு அமைக்கப்பட்ட சமூக சேவைகள் பணி அணியொன்று கடந்த 2018/2019 காலப்பகுதிகளில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நொச்சிமுனை கிராமசேவகர் பிரிவில் செயற்படுத்தப்பட்டிருந்தது.

கிராம மட்டத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் பாதிப்புகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதே இந்த சமூக சேவை பணி அணியின் திட்டமாக இருந்தது .

மேற்படி திட்டத்தின் பரீட்சார்த்த செயற்பாடு வெற்றியளித்துள்ளதுடன், இதன் அனுபவத்தைக் கொண்டு தற்போது யுனிசெப் மற்றும் சர்வோதயம் ஆகிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மட்டக்களப்பில் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 8 கிராம சேவகர் பிரிவுகளைத் தெரிவுசெய்து தொடர்ச்சியாக ஆறு மாத காலத்துக்கு இப்பணியை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியினரின் அர்ப்பணிப்புடனான செயற்பாட்டுடன் எதிர்காலத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் வீ.குகதாசனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் யுனிசெப் மற்றும் சர்வோதய அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், உளவளத்துனை உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




### காத்தான்குடியில்

# உள்ளூர் உற்பத்திகளுக்கான விற்பனை கண்காட்சி



மட்டக்களப்பு மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் வழிகாட்டலில் மாவட்டத்தில் செயற்பட்டுவருகின்ற சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து அவர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் மட்டு. முயற்சியாண்மை 2020 எனும் விசேட திட்டம் மாவட்டரீதியில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் செயற்பட்டு வருகின்ற சிறுதொழில் முயற்சியாளர்களின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் பிரதேசமட்ட விற்பனைக் கண்காட்சியை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா நேற்று பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்துவைத்தார்.

இதன்போது உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனைசெய்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதய ஸ்ரீதர், சிறுதொழில் முயற்சிப் பிரிவு மாவட்ட மேற்பார்வை உத்தியோகத்தர் எஸ்.வினோத், மாவட்ட தகவல் அதிகாரி வீ. ஜீவானந்தன், சமூர்த்தி தலைமை முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜா, சமூர்த்தி வங்கி முகாமையாளர்களான ஏ.எல்.சியாத் பஹ்மி, எஸ்.எச். முஸம்மில், மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.



பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கடற்கரைப் பிரதேசங்களை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டத்தின்கீழ் நேற்று முன்தினம் மாலை 3 மணி தொடக்கம் 6 மணி வரை திருகோணமலை ஒல்லாந்தர் குடா கடற்கரை பகுதி மாணவர்களால் தூய்மைப்படுத்தப்பட்டதை படங்களில் காணலாம். (படம் : திருகோணமலை)

# ஓட்டமாவடி பொது நூலகத்தில் வாசகர்களுக்கு அசௌகரியம்



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைகுட்பட்ட ஓட்டமாவடி பொது நூலகத்தில் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களை சரிபார்த்து முத்திரை பதிக்கும் வேலைகள் இடம்பெற்று வருவதனால் நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்கள் பெரிதும் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளதாக வாசகர்கள் கையொப்பமிட்டு மகஜரொன்றை நூலகப் பொறுப்பாளரிடம் நேற்று கையளித்தனர் .

சில நாட்களாக நூலகத்தின் வாகனத் தரிப்பிடம், நுழைவாயில், வரவேற்புப் பகுதி, பத்திரிகை வாசிப்புப் பகுதி போன்றவற்றில் நிறுத்தல், அளத்தல் உபகரணங்களை சரிபார்த்து முத்திரை பதிக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் வாசகர்கள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டி மகஜரொன்றை நூலகரிடம் கையளித்துள்ளனர்.

வாசகர்களின் நலன்கருதி குறித்த நிறுத்தல் பணிகளை பொருத்தமான வேறொரு இடத்துக்கு மாற்றக் கோரும் முறைப்பாட்டை நூலகர் பிரேதேச சபை தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூரில் குப்பைகளை கொண்டுசெல்லும் வாகனத்தால் மக்கள் அவதி



நிந்தவூர் பிரதேச சபைக்குச் சொந்தமான குப்பைகள் ஏற்றிச் செல்லும் வாகனமானது அக்குப்பைகளை மூடி மறைக்கப்படாத நிலையில் ஏற்றிச்செல்வதனால் வாகனத்திலிருந்து குப்பைகள் வீதியில் கொட்டப்பட்டுக் கொண்டே செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதனால் வீதியினூடாக பயணிக்கும் பொதுமக்களும், பயணிகளும் பல்வேறு அசௌ கரியங்களை நாளுக்குநாள் சந்தித்து வருவதுடன், இந்த வாகனமானது காலைவேளைகளில் பிரதான வீதியினூடாக பயணிக்கும் போதும், அரச மற்றும் தனியார் ஊழியர்கள் தங்களது கடமைக்குச் செல்லும் போதும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த விடயம் பற்றி குறித்த வாகனத்தின் சாரதியின் கவனத்திற்கு பலமுறை கொண்டுவந்தபோதும், அது கவனத்திற்கொள்ளப்படாத நிலையிலேயே குப்பைகள் தொடர்ச்சியாக இவ்வாறே கொண்டு செல்லப்படுகின்றன.

எனவே, இந்த நிலையை கவனத்திற்கொண்டு குப்பைகளை மூடிமறைத்து கொண்டுசெல்வதற்கு பிரதேச சபையானது உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தம்பலகாமத்தில் சிறு முயற்சியாளர் வர்த்தக சந்தை நேற்று நடைபெற்றது





சிறு கைத்தொழில் முயற்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சிறு முயற்சியாளர் வர்த்தக சந்தை நேற்று புதன்கிழமை நடைபெற்றது. 17 தொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை இங்கு சந்தைப்படுத்தினார்கள்.

தம்பலகமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயா ஸ்ரீபதி இக்கண்காட்சியை உடுத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். சிறுதொழில் முயற்சியாளர் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.பிரணவனின் ஏற்பாட்டில் இத்தொழில் சந்தை நடத்தப்பட்டது.

# சுதாகரி மணிவண்ணனுக்கு பாராட்டு



(ஓட்டமாவடி)

இலங்கை புத்தசாசன மற்றும் கலாசார அமைச்சு நாடளாவிய ரீதியிலுள்ள அரச அலுவலர்களிடையே நடத்திய படைப்பாக்கல் போட்டியில் கலந்துகொண்டு செங்கலடி குமாரவேலியார் சித்தி விநாயகர் வித்தியாலய அதிபர் சுதாகரி மணிவண்ணன் பாராட்டுப் பரிசு பெற்றுள்ளார்.

இவர் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர் என்பதோடு கவின் மகள் எனும் புனைப்பெயரில் தனது படைப்புகளை வெளியிடுபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.






இஸ்லாமிய வசந்தம் பகுதியில் கட்டுரை, கவிதை, வரலாறு, பொது அறிவு, கல்வி போன்ற அனைத்து ஆக்கங்களையும் மாணவர்கள், கல்விமான்கள், மௌலவிமார்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் அனுப்பிவைக்க முடியும். ஆக்கங்களை அனுப்பும்போது கணினி தட்டச்சு செய்யப்பட்ட ஒரு A4 பக்கத்துக்கு கூடாமல் தட்டச்சு செய்து அனுப்பவேண்டும். கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
உங்களது ஆக்கங்களை
**islamiyawasantham@gmail.com**
எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
தொடர்புகளுக்கு: 011 52000210

# "முஹர்ரம் புத்தாண்டில் புத்தொளி பெறுவோம்"




புத்தாண்டு என்றதும் எமது நினைவுக்கு வருவது நமது நடைமுறையிலுள்ள நாட்காட்டி ஆண்டே. இது வல்ல இஸ்லாமியர்களுக்கு புத்தாண்டு. முஹர்ரம் மாத ஆரம்பமே முஸ்லிம்களுக்கு புத்தாண்டு. முஹர்ரம் புத்தாண்டின் உதயம் அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களாலேயே ஏற்பட்டது.

உத்தம நபி அவர்கள் ஓர் இறைக் கொள்கையை உலகிற்கு எடுத்துக் கூறி சமத்துவ சகோதரத்துவத்தை ஏற்படுத்தி அதன்மூலம் ஐக்கியத்தை உண்டாக்கி அனைவரிடமும் நல்லதை ஏவி, கெட்ட விடயங்களை தடுத்தார்கள். இதனால் மக்கா வாசிகள் மா நபி (ஸல்) அவர்கள் மீது சீற்றம் கொண்டார்கள். இவ்வேளையில் தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் மா நபி (ஸல்) அவர்கள் பிறந்த மக்காவை விட்டு மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள்.

ஹிஜ்ரத் என்பது இஸ்லாமிய வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனை. இதனை அளவுகோல்களைக் கொண்டு யாரும் தீர்மானிக்க முடியாது. அந்தளவு மகத்தான ஒரு நிகழ்வுதான் ஹிஜ்ரத். ஹிஜ்ரத்தின் மூலம்தான் கொள்கையளவில் இருந்த இஸ்லாம் மார்க்கம் செயல் வடிவம் பெற்றது. இச்சம்பவத்தின் சரிதையே முஹர்ரம் புத்தாண்டு. இது இஸ்லாத்தின் வளர்ச்சியையும் அதன் மறுமலர்ச்சியையும் உணர்த்துகிறது.

நபி (ஸல்) அவர்கள் தனது இறுதி ஹஜ்ஜுப் பேருரையில் கூறியதாக அபூபக்ர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். "வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்த நாள் முதல் அவனது விதிப்படியே காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு வருடத்தில் 12 மாதங்கள் உள்ளன. அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை.

மூன்று மாதங்கள் தொடராகவும் ஒன்று இடையில் தனியாகவும் அமைந்துள்ளது. தொடராக வரும் மாதங்கள் துல்க∴தா, துல்ஹஜ், முஹர்ரம் என்பனவாகும். தனியாக வருவது ரஜப் மாதமாகும். அது ஜமாதுல்ஆகிர் மாதத்திற்கும் ஷ∴பான் மாதத்திற்கும் நடுவில் அமைந்துள்ளது". (புகாரி, முஸ்லிம்).

மலரவுள்ள இஸ்லாமிய புத்தாண்டில் புத்துணர்வு பெற்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அகில மக்களுக்கு காட்டிச் சென்ற நல்வழியில் நாம் வாழவேண்டும். அப்போதுதான் இஸ்லாத்தைப் பின்பற்றும் உண்மை முஸ்லிம்களாக உலகில் வாழ்ந்து நமது வாழ்க்கையை ஈருலகிற்கும் ஏற்புடையதாக அமைத்துக்கொள்ள முடியும்.

இன்னும் நாம் அநாகரியத்தையும், அந்நிய கலாசாரத்தையும் சன்மார்க்கத்திற்கு முரணான சகல விடயங்களையும் விட்டும் விலகவேண்டும். இதுவே முஹர்ரம் புத்தாண்டின் முன்மாதிரியாக எமக்கு அமையும்.

இறைதூதர் அவர்கள் ஹிஜ்ரத் சென்று இப்போது 1439ஆம் ஆண்டு நிறைவடைந்து தற்போது ஹிஜ்ரி 1440ஆம் ஆண்டு உதயமாகும் இவ்வேளையில் ஷரிஅத் அடிப்படையிலே அமைந்த இஸ்லாமிய கலாசாரத்தை எமது நடைமுறையில் கொண்டுவரவேண்டும். மாறாக, மாற்றார் எம்மைப் பார்த்து ஏளனம் செய்ய வழிவகுக்கக்கூடாது. புத்தாண்டில் புத்துணர்வு பெற்று நினைவுகளை மனதிற்கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய மாதம் பன்னிரெண்டில் ஆரம்ப மாதமான முஹர்ரம் மாதத்தை புது வருடமாகக்கொண்டு நாம் இம்மாதத்தில் இடம்பெற்ற சம்பவங்களை உற்றுநோக்குவோமானால் முஹர்ரம் என்ற புனித மாதத்தை அல்லாஹ் உருவாக்கி அதில் அவனுடைய சக்திவாய்ந்த நிகழ்வுகளை காண்பித்திருக்கிறான். அர்ஷு, குர்ஷு, லவ்ஹுல் கலம், சுவர்க்கம், நரகம், வானம், பூமி, சூரியன், சந்திரன், தாரகை போன்றவற்றை அல்லாஹ் அம் மாதத்தில் படைத்திருக்கிறான். இதனால் இம் முஹர்ரம் புத்தாண்டு மாதம் உற்பத்தி ஆண்டு என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

மலரவிருக்கும் புத்தாண்டு இலக்கு நோக்கிய பயணமாக அமையட்டும். இந்த ஆண்டின் இலக்கு உயர்ந்த சுவர்க்கமாக ஏன் இருக்கக்கூடாது? ஜன்னதுல் பிர்தௌஸை அடைவதுதான் இந்த வருட உயர்ந்த ஆசை என்ற கனவுடன் வாழ முற்படுவோம்.

குடும்பம் சமூகக் கட்டமைப்பில் மிக முக்கிய ஓர் அலகு. அதன் பாதுகாப்பு அமைதி பேணப்படுவது கட்டாயக் கடமை. எனவே, குடும்ப உறவுகளைப் பேணி, கசப்புணர்வுகளை மறந்து, சமாதானமாகி வாழ்வதற்கு சிறந்த காலப்பகுதியாக இந்த மாதங்களை அமைத்துக்கொள்வோம்.

எனவே, நாம் பிறக்கும் ஹிஜ்ரி 1442ஆம் முஹர்ரம் புத்தாண்டில் புத்தொளி பெறுவோம்.

**எம்.சி.கலீல்,**
**கல்முனை.**

## அல்-குர்ஆன் விஞ்ஞானம்

**மேலும், அவன் எத்தகையவன் என்றால் அவனே பூமியை விரித்து, அதில் உறுதியான மலைகளையும், ஆறுகளையும் உண்டாக்கினான். இன்னும் அதில் ஒவ்வொரு கனிவர்க்கத்திலிருந்தும் இரண்டு இரண்டாக ஜோடிகளை உண்டாக்கினான். அவனே இரவைப் பகலால் மூடுகிறான் – நிச்சயமாக இவற்றில் சிந்திக்கும் மக்களுக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.**




அத்தியாயம்: ரஃது (13)
வசனம்: 43
வகை: மதனீ.

## அண்ணலாரின் அருள் வாக்கு...

**இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவன் மக்களின் பணத்தை (அல்லது பொருட்களைத்) திருப்பிச் செலுத்தும் எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அவன் சார்பாக அல்லாஹ்வே அதனைத் திருப்பிச் செலுத்துவான். எவன் திருப்பிச் செலுத்தும் எண்ணமின்றி அதை (ஏமாற்றி) அழித்துவிடும் எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அல்லாஹ்வும் அவனை அழித்துவிடுவான்.**

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)
ஆதாரம்: புஹாரி

## வருக முஹர்ரம்




அகர முதல் வரிசை கொண்டாய்
ஆண்டுக்கொரு உதயம் கொண்டாய்
முஹம்மத் (ஸல்) வழியில் வந்தாய்
முஹர்ரம் என பெயரும் கொண்டாய்

இஸ்லாமிய இதழில் நீ
இடமுதலாய் கொண்டாய்
ஈராறு மாதம் தன்னில்
ஈடேற்றம் பெற்றாய்

உலக முஸ்லிம்கள் உயிர்ப்பிக்க
உதிக்கின்றாய் மெல்லமெல்ல
எங்கெல்லாம் மலரும் உன்னை
ஏகோபித்து வாழ்த்துகின்றோம்

மாதங்களில் வசந்தம் பெற்று
மலர்களின் வாசனை பெற்று
மக்களின் வரவேற்பை ஏற்று
வந்தருள்வாய் மறுமலர்ச்சி பெற்று

ஒளிரும் சூரியனாய்
குளிர்தரும் சந்திரனாய்
மின்னில் விளையும் தாரகையாய்

வருக வாழ்க மலர்க

# இல்லற வாழ்வில் புரியாத பாஷை

கணவன்-மனைவிக்கிடையில் நடைபெறும் சில உரையாடல்களும், பேச்சுகளும் மறுதரப்பால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன. ஒருவன் பாவிக்கும் ஒரு வார்த்தை, அதை அவன் உச்சரிக்கும் தொனி பேசும் நேரம், அதன்போது அவன் வெளியிடும் உணர்வு என்பவற்றுக்கு ஏற்ப அர்த்தம் மாறுபடும். இது இயல்பானதுதான். ஆனால், கணவன் அல்லது மனைவி பேசும்போது அவர் பேசும் பேச்சுக்கு அல்லது வார்த்தைக்குத் தவறான அர்த்தத்தை ஒருவர் எடுக்கும்போது இல்லறத்தில் கலவரம் மூழ்கின்றது.

அதேநேரம், அசாதாரணமான சூழ்நிலையில் ஒருவர் பேசிய பேச்சை வைத்து மாதக்கணக்காக வியாக்கியானம் செய்து விரிசலை ஏற்படுத்தவும் முடியாது. இதை இல்லற வாழ்வில் புரிந்துகொள்வது மிக மிக முக்கியமாகும்.

ஆண்கள் பெண்களைச் சீண்டிப் பார்ப்பதற்காக சில வார்த்தைகளை அல்லது செய்திகளை அல்லது வர்ணனைகளைச் செய்யலாம். அதில் விளையாட்டுணர்வு காரணமாக இருக்கும். ஆண்கள் எதையும் சாதாரணமாக எடுத்துக்கொள்வதுபோன்று பெண்கள் எடுத்துக்கொள்வதில்லை. அவர்கள் அதிகம் உணர்ச்சிபூர்வமாகப் பார்ப்பார்கள்.

எனவே, வேடிக்கையாகப் பேசிய பேச்சுகள் அவர்களது நாவில் வேம்பாகவும், நெஞ்சில் வேலாகவும் பாய்ந்து வேதனையை உண்டுபண்ணலாம். எனவே, விளையாட்டு விபரீதமாகிவிடக்கூடாது என்பதில் கணவனும் கரிசனையாக இருக்கவேண்டும். இதையெல்லாம் அலட்டிக்கொள்ளக்கூடாது என்ற விரிந்த மனதும் மனைவியிடம் இருந்தாக வேண்டும்.

பேசும் பேச்சு மட்டுமன்றி, மௌனம் தவறான விளக்கத்தைக் கொடுக்கலாம். கணவனோ, மனைவியோ ஏதோ சில காரணங்களாலோ, கஷ்டங்களாலோ மௌனமாக இருக்கலாம். இந்த மௌனத்திற்குக் கூட பல அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. என்னோடு கோபித்துக்கொண்டுதான் அவர் பேசாமல் இருக்கின்றார்.

காலையில் தேநீர் கொடுக்கத் தாமதமான தற்குத்தான் உம்முண்டு இருக்கிறார். இந்தச் சின்ன விஷயத்துக்கெல்லாம் இப்படி முகத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு இருக்கவேண்டுமா? இப்படி ஏதோ ஒரு அர்த்தத்தைத் தானே கற்பனையில் பட்டிமன்றம் நடத்திக்கொண்டிருப்பார்கள். இதுகூட இல்லறத்தில் சில பிரச்சினைகள் தோன்றக் காரணமாக அமைந்துவிடுகின்றது.

சிலபோது பெண்கள் உள்ளத்தில் ஒன்றை எதிர்பார்த்து ஏதோ சில வார்த்தைகளைப் பேசுவார்கள். இது கேட்ட ஆண்கள் அவர்கள் பேசிய பேச்சை தர்க்கரீதியாகச் சிந்தித்து எதிர்க்கேள்வி கேட்பார்கள். அந்தக் கேள்வி எடக்கு - முடக்காகக்கூட அமைந்து விடுவதுண்டு.

சிலபோது மனைவி வேலைசெய்து அலுத்துக்கொண்டு அந்த அலுப்பில் கணவனைப் பார்த்து, "நீங்களும் கொஞ்சம் வீட்டு விடயங்களில் கவனம் செலுத்துங்கள்!" என்று கூறலாம் அல்லது வேலைப்பழுவோடு இருக்கும்போது குழந்தைகள் குறும்புத்தனம் செய்தால், "பிள்ளைகள் விஷயத்தில் நான் மட்டுமா கஷ்டப்பட வேண்டும்? நீங்களும் பிள்ளைகள் விஷயத்தில் கவனம் செலுத்துங்கள்!" என்று கூறலாம்.

இதைக் கேட்ட கணவன் வார்த்தைக்கு வார்த்தை அகராதியைப் பார்த்து அர்த்தம் பார்த்தால் வாழ்க்கை வண்டி சீராக ஓடாது.

உண்மையில் வீட்டுப் பணிகளில் கணவனும் கூட இருந்து ஒத்துழைத்தால் உதவியாக இருக்கும் அல்லது நான் வீட்டுவேலை செய்துகொண்டிருக்கும்போது கணவன் குழந்தைகளைக் கொஞ்சம் கவனித்துக்கொண்டால் உதவியாக இருக்குமே என்ற ஏக்கத்தைக் கணவன் புரிந்துகொள்ள வேண்டும். தனது உணர்வை இந்த மறமண்டை புரிந்து கொள்ளவில்லையே என்று கோபம் கொந்தளிக்கும்போது அடுத்தகட்டமாக அவளிடமிருந்து வரும் பதில் பாரதூரமாக அமைந்துவிடுகின்றது.

இப்படி ஏராளமான உதாரணங்களைக் கூறலாம். இதற்கெல்லாம் வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் பார்க்காமல் அடுத்தவரது உடல் - உள நிலைவரங்களைப் புரிந்து விட்டுக்கொடுத்து அல்லது விலகிச்சென்று பழகவேண்டும்.

இதற்கான சில வழிகாட்டல்களை வழங்குவது நல்லதென நினைக்கின்றேன்.

* கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் புரிந்துகொள்ள வேண்டும். ஆண் - பெண் இருபாலாரின் இயல்பான குணங்களையும், தமது வாழ்க்கைத்துணையின் இயல்புகள், குணங்கள், பழக்க-வழக்கங்களையும் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

* ஆண் சிந்திக்கும் விதமும், பேசும் முறையும் பெண்ணினது சிந்தனை, பேச்சு என்பவற்றைவிட மாறுபட்டதாகும். இதையும் இருசாராரும் இதயத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.

* இருவரும் இருவரது பேச்சையும் முறையாகப் புரிந்துகொள்ள முற்பட வேண்டும். தவறாகப் புரிந்துகொண்டு அந்தத் தவறான புரிதலின் அடிப்படையில் தப்பான எண்ணங்களை வளர்த்துக்கொள்ளக்கூடாது.

* கணவனைப் பொறுத்தவரை மனைவியின் பேச்சுக்குச் செவி கொடுக்கவேண்டும். ஏனெனில், உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த இருக்கும் ஒரே ஊடகம் பேச்சுத்தான். அவளது உணர்வுகளுக்கு நீங்கள் மதிப்பளிக்கின்றீர்கள் என்பதை அவளின் பேச்சுக்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை வைத்தே அவள் அறியமுடியும். எனவே, நீங்கள் கொஞ்சம் செவிகொடுங்கள்!



அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் சுமார் 300 வார்த்தைகள் அடங்கிய நீண்டதொரு சம்பவத்தைக் கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் அதை அப்படியே கேட்டுவிட்டு ஆயிஷா (ரலி) அவர்கள் திருப்திப்படும் அளவுக்கு ஒரு செய்தியையும் முடிவுரையாகக் கூறினார்கள்.

ஆகவே, கணவன் - மனைவியை, மனைவி - கணவனை புரிந்துகொண்டு இருவருக்குமிடையில் புரிந்துணர்வுடன் வாழ்ந்து, ஈருலகிலும் இறைவனின் அருளைப் பெற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!.

**ஏ.எச்.எம்.அஸ்லம்,**
**கொழும்பு.**

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.






காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

# சீத்துவக்கேடு 52

முந்தி எங்கட ஊரில கருங்காலி எண்ட இடத்தில எங்கட சொந்தக்காரர் ஒருத்தரின்ரை வீட்டில நிண்ட வேம்பின்ரை அடிமரத்தில இருந்து பால் வழிஞ்சது. உடன எங்கட ஆக்கள் எல்லாம் அற்புதம் வேப்பமரத்தில இருந்து பால் வடியுது. எல்லாம் அம்மாள் ஆச்சியின்ர செயல் எண்டு போய் விளக்கு வைச்சு கற்பூரம் கொளுத்தி அந்தப் பாலை போத்தில்களிலை எடுத்து வந்தவை.

எங்கட ஆச்சியும் என்னட்டை ஒரு போத்திலைத் தந்து உங்க ஊரில இருக்கிற ஆக்கள் எல்லாம் வந்து எடுத்து முடியுறதுக்குள்ளை ஓடிப்போய் கெதியா எடுத்துக் கொண்டுவா எண்டு துரத்தினவ. நானும் ஓடிப்போய் வரிசையில நிண்டு தள்ளுப்பட்டு முட்டுப்பட்டு ஒரு மாதிரி பார்லி சோடாப் போத்திலுக்க அரைவாசி பிடிச்சுக்கொண்டு வந்தனான்.

பனங்கள்ளு மாதிரி இருக்கிறதால ஆக்கள் இதை வேப்பங்கள்ளு எண்டு சொல்லுவினம் மாதக்கணக்கில பழுதாகாம இருக்கும். எடுத்துக்கொண்டு வரேக்கை கொஞ்சம் குடிச்சுப் பாத்தனான். நல்ல இனிப்பா இருந்தது. ஆச்சி அம்மாளாச்சி தந்த உந்த வேப்பங்கள்ளு ஒரு சொட்டுக் குடிச்சா ஒரு வருத்தமும் வராது எண்டு சொல்லுவா.

ஆனால், விஞ்ஞானம் படிச்ச ஆக்கள் உது அம்மாள் ஆச்சியின்ரை அற்புதம் ஒண்டும் இல்லை எண்டு வேறை விளக்கம் குடுப்பினம். பொதுவாக வேப்பமரத்தின் தண்டுப் பகுதியில மாச்சத்தின்ரை அளவு கொஞ்சம் கூடவா இருக்கும். எங்கை என்டான்னை வேப்பமரத்திற்கு கிட்ட தண்ணி ஏதும் கூடக் குறைய இருந்தால் மரத்தில இருக்கிற தண்ணியின்ரை அளவு கூட வேப்பம் பட்டைக்கு கீழை உள்ள இழையங்கள் பாதிக்கப்படும்.

இப்பிடி இழையங்கள் பாதிக்கப்பட்டால் தண்டில இருக்கிற மாச்சத்து பட்டையை பிளந்துகொண்டு பால் மாதிரி வழியும். இதைத்தான் பால் வழியுறது எண்டு சொல்லுறது எண்டுவினம். பக்கத்தில தண்ணியின்ரை அளவு குறைய உந்தப் பால் வடியிறது நிண்டிடும் எண்டு சொல்லுவினம். ஆனால், எங்கட ஊரில உந்தப் பால் வழிஞ்ச மரத்துக்குக் கிட்ட தண்ணி நிண்டதை நான் ஒருநாளும் காணேல்லை.

வேப்ப மரம் வெளிவிடுகிற பிராகிபிடின் எண்ட இரசாயனப்பொருள் காத்தில கலந்து மனிதனையும் தாவரங்களையும் தாக்கும் கிருமிகளை இயங்கவிடாமல் தடுத்து அழிக்கிறது எண்டும், அதேமாதிரி காத்தில கலந்துள்ள தூசியை வடிகட்டும் திறனும், அந்தரோ சயனின் மாதிரியான நச்சு வாயுக்களை உறிஞ்சிக்கொள்ளும் பண்பும் வேம்புக்கு இருக்கெண்டு ஆராச்சிகள் சொல்லுது எண்டுகினம். அதாலதான் வேப்ப மரத்துக்கு கீழ படுக்கிற ஆக்கள் எப்பவும் எங்கட அப்பு மாதிரி ஒரு வருத்தம் வாதை இல்லாமல் இருக்கினம் போல.

அதை விட வேப்பங் குழை ஆடுகளுக்கு நல்ல சாப்பாடு. அதால நாங்கள் பள்ளிக்கூடத்தால வந்த கையோட வேப்பங்குழையை வெட்டி ஆடுகளுக்கு போடுவம். எண்டாலும் அப்பு பால் ஆட்டுக்குப் போட்டா பரவாயில்லை. ஆனால், கிடாயளுக்குப் போடக்கூடாது போட்டால் கிடாயளை உருக்கிப்போடும் எண்டு சொல்லுவார். அதேமாதிரி வேப்பங் குழை நல்ல பசளை எண்டபடியால் முந்தி பிற ஊர்வழியை தோட்டம் துரவு செய்யிறவை வந்து மரத்தோட குழையளை விலைக்கு தீர்த்துப் போட்டு வெட்டி வண்டில்லை ஏத்திக்கொண்டு போவினம். இதனால் பெண்டுகளுக்கு ஒரு உபரி வருமானமும் இருந்தது.

வேப்பமரம் பொதுவா இலங்கையிலும் இந்தியாவிலும் இருக்கிற கன அம்மன் கோயில்களிலை தல விருட்சமா இருக்குது. அதேமாதிரி தேவாரம் பாடப்பட்ட கன சிவன் கோவில்களுக்கும் வேம்பு தலவிருட்சமா இருக்குது. உதாரணமா திருக்குடந்தைக்காரோணம், புள்ளிருக்குவேளூர் எண்ட வைத்தீஸ்வரன் கோவில், திருவாட்போக்கி எண்ட ஐயர் மலை, திருவேற்காடு, அமணீஸ்வரர் கோயில்களில் வேம்புதான் தலவிருட்சமா இருக்குது எண்டு அப்பு சொல்லுவார் .

காடு மலை எண்டு கடவுள் இருக்கிற இடங்களில எல்லாம் இருக்கிற மரங்களில் கடவுள் தன்மை இருக்கெண்டு ஒரு நம்பிக்கை எங்கட பழைய ஆக்களுக்கு இருந்தது. அதால மரங்களைக் கும்பிட்டதோட மட்டுமில்லாமல் கோயில்களுக்கு கட்டிடங்களை கட்ட முந்தி அங்க ஆதியா இருந்த மரங்களில கடவுள் இருப்பதாக நம்பி அப்பிடியான மரங்களை தல விருட்சங்களாக கும்பிட்டவை.

அதிலும் வேப்ப மரத்தை சுத்திக் கும்பிட்டா கர்மவினைகள் நீங்கும் எண்டும் ஒரு நம்பிக்கை இருந்ததோட உந்த வேப்ப மரம் பூரட்டாதி நட்சத்திரத்துக்கு உரியது எண்டு சோதிடமும் சொல்லுது எண்டு அப்பு சொல்லுவார். உந்தக் கடவுள் நம்பிக்கையாலதான் ஆக்கள் புது வீடு கட்டேக்கை சாமி அறைக்கு கதவு யன்னல் எல்லாம் சாமித் தட்டு எல்லாம் வேப்ப மரத்தில செய்யிறவை கண்டியோ எண்டுவார்.

இப்பிடியான தெய்வீகக் காரணங்களாலதான் காவடி எடுக்கிற ஆக்கள், கரகம் எடுக்கிற ஆக்கள். கலை ஆடுற ஆக்கள், கர்ப்பூரச் சட்டி எடுக்கிற ஆக்கள் எல்லாம் கையில வேப்பிலை வைச்சிருப்பினம்.

உந்த சமய மருத்துவ காரணங்களைவிட எங்களுக்கு வேம்பில பெரிய விருப்பம் ஏனெண்டால் சித்திரை விடுதலைக்கு வேப்ப மரத்திலதான் ஒற்றை ஊஞ்சல் இல்லாட்டில் இரட்டை ஊஞ்சல் எண்டு கட்டி ஆடுவம். அதிலும் இரட்டை ஊஞ்சலிலை நாங்கள் மூண்டு நாலு பேர் ஏறி ஒவ்வொருத்தர் பலகையின்ரை ஒவ்வொரு அந்தத்திலும் நிண்டு ஊண்டி வலிச்சு ஆடினம் எண்டால் உச்சாணிக் கொப்புவரை போய் வருவம் அப்ப குடல் வாயுக்குள்ளால வெளிக்கிட்டு வந்து விழுகிற மாதிரி இருக்கும்.

சிலநேரம் ஆசையில ஏறுகிற சின்னன் பொன்னன்கள் கீழ விழுந்துடுவம் எண்ட பயத்தில ஐயோ ஐயோ எண்டு கத்துங்கள். அவட்டையள் கத்துற சத்தங்கேட்டு அதுகளின்ரை தாய் தேப்பன் வந்து பேசிப்போட்டு ரெண்டு முதுகில வைச்சுக் கூட்டிக்கொண்டு போவினம்.

நான் ஊஞ்சல் ஆடேக்கை மலரும் வருவாள் அவளுக்கு நல்ல ஸ்பீட்டா ஆடினால் சரியான பயம். உடன நிப்பாட்டு நிப்பாட்டு எண்டு கத்துவாள். அவள் கத்துறதைக் கேட்டுப் போட்டு அவளின்ரை ஆச்சி வேலிக்கு அங்கால நிண்டு கொண்டு என்ன ஆட்டத்துக்கடி உப்ப நீ ஊஞ்சல் ஆடப் போனி பிறகு என்னத்துக்கு சீவன் போற மாதிரி கத்தி வசை வைக்கிறாய் எண்டு பேசுவா. உடன நான் வலிக்கிறதை நிப்பாட்ட மலர் ஊஞ்சலால இறங்கி என்னைப் பளிச்சுக்கொண்டு போவாள்.

(தொடரும்)



# கீழடியில் கிடைத்தனவும் கிடைக்காதனவும்

இந்தியாவின் தென்மாநிலத்தில் தொல்லியல் ஆய்வுகளே நடக்காதிருந்த நிலையில், மதுரைக்கு தென்கிழக்கே 12 கி.மீ. தொலைவில் கீழடி மணலூர் கண்மாயை அடுத்துள்ள தென்னந்தோப்பில் தொல்லியல் ஆய்வை முதன்முதலாக மத்திய தொல்லியல் அதிகாரி அமர்நாத் ராமகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

மிகவும் தொன்மையான 2600 வருடங்களுக்கு முற்பட்ட நகர நாகரீகம் ஒன்றைத் தோண்டிக் கண்டறிந்து வெளிக் கொணர்ந்தார். கீழடியில் பூமிக்குள் புதைந்துள்ள தமிழரின் தொன்மையான நகரைக் கண்டு உலகமே வியந்தது. அமர்நாத் மேற்கொண்ட ஆய்வைத் தொடர்ந்து தமிழக அரசின் தொல்லியல்துறையினர் பள்ளிச்சந்தை கொந்தகை, மணலூர், அகரம் போன்ற கிராமங்களிலும் தொடர்ந்து அகழாய்வு செய்து வருகின்றனர்.

### கிடைத்தன

கீழடி அகழாய்வில் சங்கத்தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பெற்ற பானை ஓடுகள், முதுமக்கள் தாழிகள், மனிதரின் மண்டையோடுகள், குழந்தைகளின் எலும்புகள், மிகப்பெரிய விலங்கின் எலும்பு, நத்தை ஓடுகள், நாணயங்கள், பன்றிச் சின்னம் பொறிக்கப்பட்ட பவள முத்திரை, சுடுமண்ணாலான மனித உருவங்கள், சுடுமண்ணாலான விலங்கு உருவங்கள், விளையாட்டுப் பொருட்கள், தங்கக் காதணிகள், வளையல்கள், பிற அணிகலன்கள், தந்தத்தினால் ஆன சீப்பு, இரும்பு ஆயுதங்கள், செம்பு ஆயுதங்கள், சுடுமண்ணாலான தண்ணீர்த் தூம்புகள், மிக நீண்ட செங்கல் கட்டுமானங்கள் என எண்ணற்ற தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.

மகாராஷ்டிரம், குஜராத் போன்ற பகுதிகளில் பரவலாகக் காணப்படும் அகேட் மற்றும் கார்னீலியம் கற்களால் ஆன மணிகளும் கிடைத்துள்ளன. ரோம் நாட்டில் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் புழக்கத்திலிருந்த 'அரிட்டைன் பானை ஓடும்' கிடைத்திருக்கிறது. கீழடியில் கிடைத்துள்ள பொருட்களில் 3 பொருட்கள் முக்கியமானவை.

### வழிபாட்டில் இருந்தவையா

ஒன்று சுடுமண்ணால் செய்யபெற்ற கோரைப் பற்களுடன் காதுகள்வரை அகண்ட வாயை உடைய உருவப் பொம்மை. மற்றொன்று கழுத்தில் மாலையணிந்த மாட்டின் தலை. மூன்றாவது பன்றியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ள பவளம். இந்த மூன்று பொருட்களும் வழிபாட்டில் இருந்தவையா என்பதை உறுதியாகச் சொல்ல இயவில்லை என்கின்றனர்.

மேற்படி கருத்தை அடிப்படையாகக்கொண்டு, "இந்த நகர நாகரிகத்தில் மக்கள் வாழ்ந்த காலகட்டத்தில் இயற்கை வழிபாடு, மூதாதையர் வழிபாடுகள்தான் இருந்தன. மதங்கள் கிடையாது. அந்த காலகட்டத்தில் இயற்கையைக் கண்டுதான் மனிதன் பயந்தான். ஆகவே, இயற்கையை வழிபட்டான். வழிபாட்டிற்கான உருவங்கள் கிடைக்காது" என்றெல்லாம் விளக்கம் கொடுக்கின்றனர்.

### காவல் தெய்வம்

நீலிபன்றி உருவம் பொறிக்கப்பட்ட பவளத்தைச் சூதுபவளம் என்று குறிப்பிடுகின்றனர். மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட ஐயங்கள் எழுகின்றன.

1. கோரைப்பற்களுடன் காதுகள்வரை வாய் அகன்ற உருவம் எதைக் குறிக்கிறது. இயற்கையில் இப்படியொரு உருவம் உள்ளதா. சுடுமண்ணால் அழகிய மனிதத் தலையை செய்திட்ட பழந்தமிழர் எதற்காக இவ்வளவு அகோரமான உருவத்தைச் செய்துள்ளனர்.

இந்த உருவம் எதைக் குறிக்கிறது. இந்த உருவத்திற்கும் இயற்கை வழிபாட்டிற்கும் என்ன தொடர்பு. இது மதுரையின் காவல்தெய்வமான நீலியின் உருவம் இல்லையா?



2. கழுத்தில் மாலையணிந்த மாட்டின் உருவம் நந்திவழிபாட்டுடன் தொடர்புடையது இல்லையா? அல்லது தமிழரின் ஏறு தழுவுதல் மற்றும் சல்லிக்கட்டு விளையாட்டுடன் தொடர்புடையது இல்லையா?

3. பவளத்தில் பொறிக்கப்பட்டுள்ள பன்றியின் உருவத்திற்கும் சூதுக்கும் என்ன தொடர்பு. மதுரையில் சிவபெருமான் பன்றி அவதாரம் எடுத்துத் திருவிளையாடல் செய்தார். பன்றி வம்சத்தினர் 12 பேர் அமைச்சர்களாய் இருந்து பாண்டிய நாட்டில் நல்லாட்சி நடத்தினர் என்று திருவிளையாடற் புராணம் குறிப்பிடுகிறது.

இந்தக் கதைகளுக்கும் பவளத்தில் பொறிக்கப்பட்டுள்ள பன்றி உருவத்திற்கும் தொடர்பு? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிந்தால்தானே கீழடியில் வழிபாட்டுப் பொருட்களே கிடைக்கவில்லை என்று உறுதியாகச் சொல்ல இயலும்.

மணவூரிலிருந்து மதுரைக்கு தொல்லியல் ஆய்வுகள் நடைபெறும் இடத்திற்கு அருகே மணலூர் உள்ளது. மணலூர் மிகவும் தொன்மையான ஊராகும். மணலூரை பெருமண லூர் என்றும் மணவூர்புரம் என்றும் மகாபாரதம் குறிப்பிடுகிறது. இந்த ஊரை மணலூர் என்று பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணம் குறிப்பிடுகிறது. இந்த ஊரின் பழைய பெயர் மணவூர் என்கிறது பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம்.

இந்த ஊரில் பிறந்த வளர்ந்த காந்திமதி என்ற பெண்ணை உக்கிரபாண்டியன் திருமணம் செய்துகொண்ட காரணத்தினால் மணலூருக்கு மணவூர் என்ற காரணப் பெயர் உண்டானது. மதுரைக்கு அருகே வடக்கு திசையில் மணவூர் இருந்தது என்றொரு செய்தியையும் திருவிளையாடற் புராணம் பதிவுசெய்துள்ளது.

### கிடைக்கவே கிடைக்காது

கீழடிக்குக் கீழே எங்கு தோண்டித்தோண்டிப் பார்த்தாலும் வழிபாடு தொடர்பான பொருட்கள் கிடைக்கவே கிடைக்காது. ஏனென்றால் இந்தத் தொன்மையான நகர் அங்கு வசித்த மக்களால் கைவிடப்பட்ட நகரமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் புலம்பெயர்ந்து சென்று புதிதாக உருவாக்கப்பெற்ற மதுரையில் குடியேறியுள்ளனர். மதுரைக்கு குடிபெயர்ந்து செல்லும்போது, அவர்கள் அன்றாடம் பயன்படுத்திக்கொண்டிருந்த பொருட்களை எல்லாம் எடுத்துச் சென்றிருப்பர்.

அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் வழிபாட்டுப் பொருட்களே தலையானவை. எனவே, வழிபாட்டிலுள்ள பொருட்களையே முதலாவதாகத் தலையில் தூக்கிவைத்து எடுத்துச் சென்றிருப்பார்கள். கீழடியில் மக்கள் வாழ்ந்த காலத்தில், அவர்களால் தொலைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட பொருட்களே தொல்லியலாளர்களால் தோண்டிக் கண்டறியப்பட்டு வருகின்றன.

வழிபாட்டுப் பொருட்கள் தொலைந்து போயிருக்க வாய்ப்பே இல்லை. அப்படியே தொலைந்து போயிருந்தாலும், அவற்றை அந்த மக்கள் அப்போதே தேடிக் கண்டுபிடித்து எடுத்திருப்பார்கள்.

மக்கள் புலம்பெயர்ந்து செல்லும்போது வழிபட்ட கோயில்கள், தெய்வ கோட்டங்களைக் கைவிட்டுச் சென்றிருப்பர். எனவே, கோயில் கட்டுமானங்களின் எச்சங்கள் தொல்லியல் அகழாய்வில் கிடைத்திட அதிகமான வாய்ப்புகள் உள்ளன.

### புதையுண்டுள்ள சிவாலயம்

அகழாய்வு செய்த இடத்திற்கு நேர் கிழக்கே 500 மீற்றர் தொலைவில் ஒரு சிவாலயம் மணலூர் கண்மாய்க்கரையில் புதையுண்டுள்ளது. இங்கு மிகப்பெரிய நந்தியையும், சிதைவுபட்டுள்ள சுற்றுச் சுவரையும் இன்றும் காணலாம். இந்த குறிப்பிட்ட இடத்தை அகழாய்வு செய்யாமல் சங்கத் தமிழர் இயற்கை வழிபாடுதான் செய்தார்கள், தெய்வ வழிபாடு செய்யவில்லை என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

திருவிளையாடற் புராணக் கதைகளில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொல்லியலாளர்கள் கண்டறிந்துள்ள தொல்பொருட்களுடன் ஏன் பொருத்திப் பார்க்க மறுக்கின்றனர்? தொல்லியல் ஆய்வுகள் நடைபெறும் வரை திருவிளையாடற் புராணக்கருத்துகளைப் பலரும் புனைக்கதைகள் என்றே கூறிவந்துள்ளனர். புராணத்தில் கூறப்பட்டுள்ள கதைகளில் தமிழரின் தொன்மையான வரலாறும் புதைந்துள்ளது. சங்கத் தமிழரின் தொன்மையையும், திருவிளையாடற் புராணக் கதைகளின் உண்மையையும் உலகறியச் செய்வோம்.

**முனைவர். நா.ரா.கி.காளைராசன்**
*அமைப்பாளர்*
*திருவிளையாடற் புராண ஆராய்ச்சி மையம்.*

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# புரோ நைட்ஸ் எக்கடமி ஏற்பாட்டில் சதுரங்க சுற்றுப் போட்டி

(எம்.என்.எம்.அப்ராஸ்)

ro Knights Academy யின் ஏற்பாட்டில் சதுரங்க சுற்றுப் போட்டியொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருதில் நடைபெற்றது. இச்சுற்றுத் தொடரில் 7 வயது தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட சுமார் 50 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

தனிநபர்களுக்கிடையில் 5 சுற்று தொடர்களாக சுழற்சிமுறையில் நடைபெற்ற இப்போட்டியில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலிருந்தும் தலா ஒரு வெற்றியாளர் வீதம் தெரிவுசெய்யப்பட்டனர்.

இச்சுற்றுப் போட்டி புரோ நைட்ஸ் எக்கடமி பணிப்பாளர் ஏ.எம். சாகிர் அஹமட்டின் தலைமையில் நடைபெற்றதுடன், இச்சுற்றுத் தொடரின் வழிகாட்டியாகவும், முதல்நிலை நடுவராகவும் சாஹிரியன் நைட்ஸ் கழகத்தின் தலைவர் அஸ்ஜத் அஸீஸ் கலந்துகொண்டார்.

மேலும், இச்சுற்றுத்தொடரில் கலந்து கொண்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு நினைவுச்சின்னம், சான்றிதழ் என்பன வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.





# 2020 ஐ.பி.எல். தொடரின் பிரதான அனுசரணையாளராக 'Dream11' ஏலத்தில் தெரிவு




2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் பிரதான அனுசரணையாளராக இந்தியாவைச் சேர்ந்த 'ட்ரீம் இலவன்' நிறுவனம் தெரிவாகியுள்ளது.

கிரிக்கெட் உலகில் இந்தியன் பிரிமியர் லீக் தொடருக்கு கோடான கோடி இரசிகர்கள் பட்டாளம் காணப்படுகிறது. இரசிகர்களை வைத்துதான் நிறுவனங்கள் வருமானம் உழைத்துவருகின்றன. இரசிகர்கள் பட்டாளம் காரணமாக இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் போட்டிகளின்போது விளம்பரம் செய்வதற்கு பல நிறுவனங்கள் ஆர்வம் காட்டிவந்தன.




கடந்த 2018ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டு காலப்பகுதியில் பிரதான அனுசரணையாளராக 2,200 கோடி ரூபா (இந்திய ரூபா) ஒப்பந்தத்தில் 'விவோ' நிறுவனம் கைப்பற்றியிருந்தது. இந்நிலையில், லடாக் எல்லை மோதலில் இந்திய இராணுவ வீரர்கள் மரணமடைந்த விவகாரத்தில் இருநாட்டு உறவில் சிக்கல் நீடித்துவருகிறது.

இதன்பிரகாரம் 2020 இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் பிரதான அனுசரணையாளரிலிருந்து சீனாவின் விவோ நிறுவனம் விலகுவதாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து பிரதான அனுசரணையாளராக எந்த நிறுவனம் வரும் என்ற கேள்வி எழுந்துவந்தது.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்திய ஏலத்தில் 2020 இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் பிரதான அனுசரணையாளருக்கான வாய்ப்பை 'ட்ரீம் லெவன்' நிறுவனம் 222 கோடி ரூபாவுக்கு கைப்பற்றியது. இதேவேளை, 'டாட்டா' நிறுவனம் 180 கோடி ரூபாவுக்கும், 'பைஜூஸ்' நிறுவனம் 125 கோடி ரூபாவுக்கும் ஏலத்தில் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# UEFA சம்பியன்ஸ் லீக்

## லெப்ஜிக்கை வீழ்த்தி முதல் தடவையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்த பி.எஸ்.ஜி.



ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான காற்பந்து தொடரான யு.ஈ.எவ்.ஏ. சம்பியன்ஸ் லீக் தொடரின் வரலாற்றில் இறுதிப்போட்டிக்கு தடவையாக பிரான்ஸின் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் கழகம் தகுதிபெற்றுள்ளது.

நேற்று அதிகாலை நடைபெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் பிரான்ஸின் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் கழகத்தை எதிர்த்து ஜேர்மனியின் லெப்ஜிக் கழகம் மோதியது. விறுவிறுப்பாக ஆரம்பமான இப்போட்டியில் லெப்ஜிக் கழகம் சவாலாக விளங்கினாலும் பந்தை 58 சதவீதம் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) கழகம் வெற்றிபெற்று 2020 சம்பியன்ஸ் லீக் இறுதிப்போட்டிக்கு முதல் அணியாக தகுதி பெற்றது.

போட்டி ஆரம்பமாகி 13ஆவது நிமிடத்தில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் வீரர் மார்குயின்ஹொஸ் கோல் அடித்தார். பின்னர் முதல் பாதியின் இறுதி நேரத்தில் போட்டியின் 42ஆவது நிமிடத்தில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைனின் மற்றுமொரு வீரர் அஞ்சல் டி மரியா கோல் அடித்தார். அதனுடன் முதல் பாதி முடிவுக்குவந்தது. முதல் பாதி முடிவில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் 2-0 என்ற ரீதியில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து ஆரம்பமான இரண்டாவது பாதி ஆட்டத்தின் 56ஆவது நிமிடத்தில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் வீரர் ஜூஆன் பேர்னட் வலாஸ்கோ கோல் அடிக்க அணியின் மொத்த எண்ணிக்கை 3ஆக உயர்வடைந்தது. இறுதியில் லெப்ஜிக் கழகத்தால் ஒரு கோலும் அடிக்க முடியாமல்போக பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் 3-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பிரான்ஸின் லையன் மற்றும் ஜேர்மனியின் பேயர்ன் முனிச் கழகங்கள் மோதுகின்றன. இந்தப் போட்டி யானது இன்று நடை பெறவுள் ளது.

# 74 ஆண்டுகளில் மோசமான தோல்வி : பயிற்றுவிப்பாளர் அதிரடி நீக்கம்

ஸ்பெயினைச் சேர்ந்த பிரபல காற்பந்து கழகங்களில் ஒன்றான பார்சிலோனா காற்பந்து கழகத்தின் பயிற்றுவிப்பாளர் பொறுப்பிலிருந்து குயிக் சேட்டின் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

பார்சிலோனா கழகத்தின் தலைமை பயிற்றுவிப்பாளராக ஸ்பெயின் முன்னாள் வீரர் குயிக் சேட்டின் கடந்த 7 மாதங்களாக பணியாற்றிவந்தார். கடந்த வாரம் நடைபெற்ற ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் காற்பந்து தொடரின் காலிறுதிப் போட்டியில் பார்சிலோனா கழகம் 2-8 என்ற கோல் கணக்கில் பேயர்ன் முனிச் அணியிடம் படுதோல்வியடைந்தது. கடந்த 74 ஆண்டுகளில் பார்சிலோனா கழகத்தின் மோசமான தோல்வியாக இது அமைந்தது. இதையடுத்து பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்த குயிக் சேட்டின் அதிரடியாக நீக்கப்பட்டார்.

தற்போது நெதர்லாந்து அணியின் தலைமை பயிற்சியாளராக செயற்பட்டுவரும் 57 வயதுடைய ரொனால்டு கோமேன் அந்த பொறுப்பிலிருந்து விலகி, பார்சிலோனா கழகத்தின் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்படுகிறார்.

பார்சிலோனா பயிற்சியாளர் பொறுப்பை ஏற்பதற்கு முன் ரொனால்டு கோமேன் சில நிபந்தனைகளை விதித்துள்ளார். 2020-21ஆம் ஆண்டு காற்பந்து பருவகாலத்திற்கு குறிப்பிட்ட சில புதிய வீரர்களை ஒப்பந்தம் செய்யவேண்டும். அதில் அனுபவ வீரர் லூயிஸ் சுவாரசை கழற்றிவிட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளதாக தெரிய வருகிறது.

இதேவேளை, நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி பார்சிலோனாவை விட்டு விலக விரும்புவதாக மீண்டும் தகவல்கள் கசிந்துள்ளன.



# மூவகையான கிரிக்கெட்டிலும் சாதனை படைத்த பாபர் அஸாம்



இங்கிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 47 ஓட்டங்களை குவித்த பாகிஸ்தான் அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் பாபர் அஸாம் கிரிக்கெட் உலகில் புதிய சாதனையொன்றை நிகழ்த்தியுள்ளார்.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மழை காரணமாக சமநிலையில் நிறைவுக்குவந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் பேரவையானது டெஸ்ட் வீரர்களுக்கான புதிய தரப்படுத்தலை நேற்று முன்தினம் வெளியிட்டது.

அதன்படி பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர் பாபர் அஸாம் 798 தரவரிசை புள்ளிகளுடன் ஒரு நிலை முன்னேறி மீண்டும் ஐந்தாமிடத்திற்கு வந்துள்ளார். இவ்வாறு டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் பாபர் அஸாம் முதல் ஐந்திற்குள் புகுந்ததன் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் உலகில் மூன்று விதமான போட்டிகளிலும் அதாவது, டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளின் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதல் ஐந்திற்குள் காணப்படும் ஒரேயொரு வீரராக சாதனை படைத்துள்ளார்.

பாபர் அஸாம் தற்போது இருபதுக்கு இருபது துடுப்பாட்ட வீரர் களின் தரவரிசை யில் முதலிடத்திலும், ஒருநாள் துடுப்பாட்ட தரவரிசையில் மூன்றா மிடத்திலும் மற்றும் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தர வரிசையில் ஐந்தாமிடத் திலும் காணப்படு கிறார்.

# பாகிஸ்தான் தொடருக்கான இங்கிலாந்து T20I குழாம் வெளியானது



இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் அடுத்து நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடருக்கான பாகிஸ்தான் அணியின் 14 பேர் கொண்ட இருபதுக்கு இருபது குழாம் இங்கிலாந்து கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் சவாலுக்கு மத்தியில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரசிகர்களின்றி மூடிய மைதானத்தில் தற்போது டெஸ்ட் தொடரில் விளையாடிவருகின்ற நிலையில், அடுத்து மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடர் ஆரம்பமாகவுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கடந்த மார்ச் மாதம் சர்வதேச போட்டிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் நடைபெறுகின்ற முதல் இருபதுக்கு இருபது தொடராகவும் குறித்த தொடர் அமைந்துள்ளது.

இயன் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து குழாமில் மொயின் அலி, ஜொனி பெயர்ஸ்டோ, டொம் பென்டன், சேம் பில்லிங்ஸ், டொம் கரன், ஜோ டென்லி, லுவிஸ் க்ரேகெரி, கிறிஸ் ஜோர்டன், ஷாகிப் மஹ்மூத், டேவிட் மாலன், ஆதில் ரஷீட், ஜேசன் ரோய், டேவிட் வில்லி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேலும் பெட் ப்ரவுண், லியம் லிவ்விங்ஸ்டன் மற்றும் ரீஸ் டொப்லி ஆகிய வீரர்கள் மேலதிக வீரர்களாக குழாமில் இணைக்கப்பட்டுள்ளனர். இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது சர்வதேச தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7